# ஈழமுரசு
அவுஸ்திரேலியா

முரசு :25 முழக்கம் :303 Feb-Mar 2014 Vol : 25 Issue: 303



ஜெனீவா தீர்மானம் ஓர் பார்வை 05

இரண்டு தேசங்களின் அபிவிருத்தி ஓர் பார்வை 06

சுரேஸ் பிரேமச் சந்திரனுடனான நேர்காணல் 08




# ஜெனீவாத் தீர்மானம் ஓர் பார்வை


ஆதரவு-23 எதிர்ப்பு-12 விலகல்-12




# காணாமல் போகும் காணாமல் போனோரின் உறவுகள்



# காணாமலே போன மலேசிய MH 370 விமானம்



# ஈழமுரசு

அஞ்சல் தொடர்புகளுக்கு

**EELAMURASU AUSTRALIA**
**PO BOX 214, South Morang,**
**VIC 3752,**
**Australia.**

இணைய முகவரி

www.eelamurasu.com.au

ஆசிரியபீட தொடர்புகளுக்கு

emurasu@gmail.com

விளம்பரத் தொடர்புகளுக்கு

emurasu@gmail.com

0403 155 066 & 0431 885 199


குறிப்பு

இவ்விதழில் பிரசுரிக்கப்படும்
விளம்பரங்களுக்கு அந்தந்த
விளம்பரதாரர்களே பொறுப்பு,
வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்பு
செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.

## அறிவித்தல்

வாசகர்கள் மற்றும்
விளம்பரதாரர்கள்
அனைவரும் ஈழமுரசிற்கான
ஆக்கங்கள்
மற்றும் விளம்பரங்கள்
ஆகியவற்றை
emurasu@gmail.com
என்ற மின்னஞ்சல் முகவரிக்கு
அனுப்பிவைக்கும்படி
அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

–நிர்வாகம்–

# ஆசிரியர் தலையங்கம்

முரசு–25 முழக்கம்–303

## தாயக மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவோம்!

தாயகத்தில் இன்று எமது மக்களின் வாழ்க்கைமுறை ஒரு கொதிநிலையிற் காணப்படுகின்றது. சிங்களப் பேரினவாதத்தின் கொடூர அடக்குமுறைக் கரங்கள் எமது மக்களின் குரல்வளையை நெரித்துக்கொண்டுள்ளன. நாளாந்தம் எமது மக்கள்மீது அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

எமது மக்கள்மீதான சிங்கள அடக்குமுறை காலங்காலமாகத் தொடர்ந்து வந்தாலும்கூட அண்மைய நாட்களில் எமது மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட கைதுகள், தேடுதல் வேட்டைகள், சுற்றிவளைப்புக்கள், கடத்தல்கள், கொலைகள் என்பன உச்சக்கட்டத்தை எட்டியுள்ளன.

ஜெனீவாவில் மனிதவுரிமை கூட்டத் தொடரில் சிறிலங்கா அரசாங்கத்துக்கு எதிரான பிரேரணை குறித்து விவாதங்கள் கூர்மையடைந்திருந்த வேளையிலேயே தமிழ்மக்கள் மீது திடீரென்று இந்த அடக்குமுறைகள் பெருமளவில் கட்டவிழ்த்து விடப்பட்டன.

தன்மீதான உலகின் அழுத்தத்தைக் குறைப்பதற்காக சிறிலங்கா அரசாங்கம் திட்டமிட்டு மேற்கொண்ட ஒரு முறியடிப்பு நடவடிக்கையின் ஓரங்கமே இந்த அடக்குமுறைகள். ”புலிகளின் ஆபத்து இன்னமும் இருக்கின்றது, அவர்கள் மீளிணையவும் தாக்குதல்களில் ஈடுபடவும் முற்படுகிறார்கள்” என்ற காரணத்தை முன்வைத்து உலகின் குற்றச்சாட்டுக்களில் இருந்து தப்புவதற்கு ஏதுவாக நன்கு திட்டமிட்டு சிறிலங்கா அரசு செயற்பட்டத் செயற்பட்டு வருகின்றது.

நாளாந்தம் கைதுகள், பிடியாணைகள், சுற்றிவளைப்புக்கள், தேடுதல் வேட்டைகள் என்பன தொடர்ந்து கொண்டுள்ளன. புனர்வாழ்வு முகாம்களில் இருந்து விடுதலையாகி சமூகத்துடன் இணைந்திருந்த முன்னாட் போராளிகள் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள் அல்லது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். இன்னும் பலர் கடுமையாகத் தேடப்படுகிறார்கள். தம்மால் தேடப்படுபவர் கிடைக்காமற் போகவே அவர்களது குடும்ப உறுப்பினர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள். மீண்டும் சோதனைச்சாவடிகள் திறக்கப்பட்டதுடன் கிராமம் கிராமமாகச் சுற்றிவளைப்பும் தேடுதல் வேட்டைகளும் தொடர்ந்துகொண்டுள்ளன.

இன்னமும் ஆயுதப் போராட்டத்தின் ஆபத்து நீங்கவில்லையென்பதை உலகுச் சொல்வதற்காக ஒருபுறம் இவை நிகழ்த்தப்பட்டாலும், தமிழ்மக்களைப் பயமுறுத்திப் பணியவைக்கும் ஒரு நோக்கத்தோடும் அரசாங்கம் இவ்வடக்குமுறைகளை ஏவிவிடுகின்றது. சிறிலங்கா அரசாங்கம் தனக்கு எதிரானவர்களையும் தமிழ்த்தேசியத்துக்காக உழைப்பவர்களையும் இனங்கண்டு அவர்கள் மீதான அழுத்தத்தைப் பிரயோகிக்கத் தொடங்கியுள்ளது. அவ்வகையில்தான் காணாமற்போன தனது தமையனைத் தேடிப் போராட்டங்கள் செய்த விபூசிகாவும் அவளது தாயாரும் பிடிக்கப்பட்டமையும், மதகுரு உட்பட்ட மனிதவுரிமைச் செயற்பாட்டாளர்கள் கைதுசெய்யப்பட்டமையும் அடங்கும். அதேபோல் ஜெனிவாவில் சிறிலங்கா அரசாங்கத்துக்கு எதிரான போர்க்குற்றங்கள் குறித்துச் சாட்சியமளித்த மருத்துவரின் குடும்பத்தினர் மீதான மிரட்டலும் பார்க்கப்பட்ட வேண்டும்.

இந்த இக்கட்டான நிலை இன்னும் மோசமடையவே வாய்ப்புள்ளது. ஜெனீவாத் தீர்மானத்தின் பின்னான பழிவாங்கும் முகமாக எமது மக்கள்மீது இன்னும் கடுமையான அடக்குமுறை ஏவிவிடப்படலாம். இவ்வளவு துணிவுடன் தமது அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டங்களைச் செய்யும் மக்களையும் சாட்சியமளிக்கும் மக்களையும் மிரட்டி அடிபணிய வைக்க இன்னும் கடுமையான அளவில் சிறிலங்கா அரச இயந்திரம் முடுக்கிவிடப்படலாம்.

இந்நிலையில் எமது மக்களுக்கான பாதுகாப்புக் கேடயமாக இருக்க வேண்டியவர்கள் புலம்பெயர்ந்து வாழும் தமிழ்மக்களே. முடிந்தவரை தாயகத்தில் இருக்கும் அவலநிலையை வெளியுலகின் செவிகளுக்குக் கொண்ர்ந்து உண்மைநிலையை அறியவைக்க வேண்டும். பன்னாட்டு நிர்ப்பந்தங்கள் மூலம் எமது மக்கள் மீதான அடக்குமுறைகள் குறைக்கப்படக்கூடிய சூழ்நிலையை மேற்கொள்ள வேண்டும். தொடர்ச்சியான போராட்டங்கள் மூலம் எமது அழுத்தத்தை பன்னாட்டு அரசாங்கங்களுக்கும் மனிதவுரிமை அமைப்புக்களுக்கும் செலுத்தி ஒரு பாதுகாப்புக் கண்காணிப்பை எமது தாயகப் பகுதியில் ஏற்படுத்தப் பாடுபட வேண்டும்.

குறுகிய கால அளவில் எமது மக்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதோடு, நீண்டகால அடிப்படையில் எமது போராட்டத்தினதும் சுதந்திர வேட்கையினதும் நியாயத்தன்மையை உலகம் உணரச்செய்ய தாயகத்தில் நிகழ்ந்துவரும் தற்போதைய அவலத்தைப் பயன்படுத்தித் தொடர்ச்சியாகப் போராடுவோம்.

# நம்பிக்கை ஒளி - அவுஸ்ரேலியாத் தமிழர் ஆதரவில்




தாயகத்தில் போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களை மையமாகக் கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் தையல் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இச் செயல் திட்டத்திற்கு அவுஸ்ரேலியா நம்பிக்கை ஒளி நிறுவனம் அனுசரணை வழங்குகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இரத்தினபுரம் கிராமத்தில் வறுமைக் கோட்டிற்குட்பட்ட பெண்கள் இனம் காணப்பட்டு அவர்களின் குடும்பப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் அவர்களுக்கு தையல் தொழிற் பயிற்சி வழங்கப்படுகின்றது. அவுஸ்ரேலியா வாழ் தமிழ் மக்கள் நம்பிக்கை ஒளி நலவாழ்வுத் திட்டத்தின் ஊடாக தையல் தொழில் பயிற்சி வாழ்வாதாரச் செயல் திட்டத்திற்கு அனுசரணை வழங்குகின்றனர்.

இச் செயல் திட்டத்தின் மூலம் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் தமது அன்றாட வாழ்வாதார ஜீவனோபாயத்தினை அவர்களே கவனித்துக்கொள்ளக்கூடிய வகையில் மேற்படி தொழிற்பயிற்சி நெறி உருவக்கப்பட்டுள்ளது. அவுஸ்ரேலியா நம்பிக்கை ஒளி நலவாழ்வுத் திட்டத்தின் அனுசரணையில் தாயகத்தில் அரச சார்பற்ற தேசிய தொண்டு நிறுவனமாக செயற்படும் சமூக பொருளாதார சிறுவர் அபிவிருத்தி நிறுவனத்தினால் தையல் தொழிற் பயிற்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

தையல் தொழிற் பயிற்சி வாழ்வாதாரச் செயல் திட்டத்தில் 33 வரையிலான போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் பயன் பெறுகின்றனர். தையல் கற்கை நெறியை கற்கும் பயனாளிகளுக்கு நம்பிக்கை ஒளி அவுஸ்ரேலியா நிறுவனத்தினால் துணிகளும் வழங்கப்படுகின்றது.






நம்பிக்கை ஒளி அவுஸ்ரேலியா அமைப்பு தமிழர் தாயகத்தில் **Social Economics Children Development Association** நிறுவனத்துடன் இணைந்து மனிதநேயத் தொண்டுப் பணிகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. போரினால் பல குடும்பங்களின் வாழ்வு இருள் சூழ்ந்துள்ளது. அவர்களின் வாழ்வில் நம்பிக்கை ஒளி நிறுவனம் விளக்கேற்றி ஒளியூட்டி வருகின்றது என்றால் மிகையாகாது.



நம்பிக்கை ஒளி நலவாழ்வுத் திட்டத்தின் சமூக சேவை மனித நேயத் தொண்டுப்பணி போற்றுதற்குரிய சேவையாக உள்ளது. அதன் உயிரோட்டமும் இயங்கு நிலையும் குறிப்பிடக்கூடிய அம்சமாகும். போருக்குப் பின் ஈழத் தமிழ் மக்களுடன் பணி செய்த பலர் கால ஓட்டத்தில் மறைந்து போனாலும் தொடர்ந்தும் பணி செய்யும் சிலரில் நம்பிக்கை ஒளி நலவாழ்வு நிறுவனம் பொறுப்புணர்வுடன் போரின் காயங்களை ஆற்றும் பணியில் இடைவிடாது தொடர்ந்து பணி செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது என சமூக பொருளாதார சிறுவர் அபிவிருத்தி நிறுவனத்தின் இயக்குனர் ச.சசிகரன் தெரிவிக்கின்றார்.

## மலேசிய விமானம் நடந்தது என்ன?

.........தொடர்ச்சி 12ம் பக்கத் தொடர்ச்சி

இந்தியப் பெருங்கடலில் தொலைந்துவிட்டது என்று கூறியமைக்காகவும், தகவல்களை வெளியிடுவதில் தாமதம் செய்தமைக்காகவும் மலேசியன் அதிகாரிகள் மன்னிப்பு கேட்கவேண்டும் என்று அவர்கள் கூறுகின்றனர். தெற்கு சீன கடல், தெற்கு இந்திய பெருங்கடல் பகுதிகளில் கப்பல், விமானம், செய்மதி மூலமாக சல்லடை போட்டு தேடியும் எதுவும் உருப்படியாக கிடைக்கவில்லை. இதற்கிடையில் தெற்கு இந்திய பெருங்கடலில் ஆஸ்திரேலியாவின் பெர்த் நகரில் இருந்து சுமார் 1850 கி.மீ தொலைவில் விமானம் விழுந்து விட்டதாக கூறப்படும் பகுதியில் விமானத்தின் பாகங்கள் போன்ற சில மிதப்பதாக ஆஸ்திரேலியா, பிரான்ஸ் மற்றும் சீன நாடுகள் கூறின.

இரு புகைப்பட ஆதாரங்களுடன் அவுஸ்திரேலியா மற்றும் மலேசியா அறிவித்தது. மிதக்கும் பொருட்கள் நீலம் மற்றும் ஆரஞ்சு நிறம் உள்ளிட்ட பல நிறங்களில் உள்ளன. அவை மாயமான மலேசிய விமானத்தின் நிறங்களை போன்ற தோற்றத்தில் உள்ளது. எனவே, அவை மாயமான மலேசிய விமானத்தின் பாகங்களாக இருக்கலாம் என்ற கூறபட்டது ஆனால் இன்று அது விமான பாகங்கள் அல்ல என்றும் அவை மீன் சாதங்கள் என்று தற்போது கண்டறியப்பட்டு உள்ளது. எனவே அவர்கள் உயிருடன் இருக்கவும் வாய்புள்ளதா என்ற கேள்வியும் எழுகின்றது.

செய்மதி படங்களை வைத்து கடலில் விமான பாகங்களை தேடும் பணி நடைபெற்றது. விமானத்தின் தகவல் தொடர்புகள் துண்டிக்கப்படுவதற்கு முன்பு, விமானம் திடீரென மாயமாவதற்கு முன்பு விமானத்துக்குள் என்ன நடந்தது என்பதை கறுப்பு பெட்டி மூலம் கண்டுபிடிக்கலாம். அந்த கறுப்பு பெட்டியும் 30 நாட்கள் வரைதான் செயல்படும். பட்ரறி செயலிழந்துவிட்டால் கறுப்பு பெட்டியில் இருந்து சிக்னல் கிடைக்காது.

அதன்படி, ஏப்ரல் 5ம் தேதி வரைதான் கறுப்பு பெட்டியில் இருந்து சிக்னல் கிடைக்கும். அதன் பிறகு அடங்கி விடும் என்று கூறுகின்றனர். எனவே, அமெரிக்கா உதவியுடன் கடலுக்கு அடியில் கறுப்பு பெட்டியை தேடும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது. விமானத்தின் பாகங்கள் கிடந்ததாக கூறப்படும் தெற்கு இந்திய பெருங்கடல் பிராந்தியத்தில் அடிக்கடி மோசமான வானிலை காணப்படுவதால் தேடும் பணியில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. ஆஸ்திரேலியா, சீனா, ஜப்பான், நியூசிலாந்து, அமெரிக்கா உள்ளிட்ட 16 நாடுகளின் கப்பல்கள் அப்பிராந்தியத்தில் முகாமிட்டுள்ளன. கறுப்பு பெட்டி கிடைத்து விட்டால் மர்மம் விலகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்கா நீரின் கீழ் 6 கி.மீ வரை யான பகுதியிலிருந்து சமிக்கைகளை பெறவல்ல ரேடார் ஒன்றை அமெரிக்காவில் இருந்து ஆஸ்திரேலியா கொண்டு வரப்பட்டு தேடுதல் பணிக்காக அனுப்பி வைக்கப்பட்டதாக தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் இந்திய பெருங்கடலில் விமானத்தை தேடும் பகுதி மாற்றபட்டு உள்ளது. தற்போது 1100 கீமீட்டர் வடக்கில் தேடும் பணி தொடங்கி உள்ளது புதிய தேடும் பகுதி 319000 சதுர கிலோமீட்டர் ஆகும் இது பெர்த்தின் மேற்கே 1850 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. மலேசிய விமானம் மாயமானதை தொடர்ந்து மலேசிய விமான நிலையத்தில் காக்பிட் எனப்படும் விமானிகள் அறையில் பிரவேசிக்கும் உறுப்பினர்கள் எண்ணிக்கை தொடர்பான கண்டிப்பான வழிமுறைகளை கடைபிடிக்க உத்தரவிடப்பட்டு உள்ளது. மலேசிய ஏர்லைன்ஸ், மலேசிய ஏர்போட் ஹோல்டிங் ஆகியவை விமானிகள் அறையில் தலைமை விமானி, உதவி விமானி தனியாக இருக்க அனுமதி இல்லை எனக்கூறி உள்ளது.

# ஜெனீவா ஆடுகளம் நல்லது நடக்குமா நமக்கு ?

—சேரா—



ஐ. நா மனித உரிமை கூட்டத்தொடர் தொடர்பாக நாளும் ஒரு செய்தி வந்த வண்ணமே இருக்கிறது. சம்மந்தப்பட்ட தரப்புக்கள் தமது ராஜதந்திர நகர்வுகளை ஆர்முடுக்கி விட்டுள்ளன. தமிழர்களும் பல விதங்களில் தமது நகர்வுகளை ஜெனீவா நோக்கி நகர்த்திக்கொண்டிருக்கிறார்கள். மூன்றாவது முறையாக கொண்டுவரப்பட உள்ள தீர்மானத்தில் பல்வேறுபட்ட எதிர்பார்ப்புக்கள் உள்ளதோடு அது தொடர்பாக பல எதிர்வுகூறல்களும் அரசியல் விமர்சகர்களால் முன்வைக்கப்பட்ட வண்ணம் உள்ளது. இந்நிலையில் அவை தொடர்பான தெளிவான புரிதலை வைத்திருக்க வேண்டியது அவசியமான ஒன்றாக அமைகிறது.

### ஐ.நா. சபை

ஜக்கிய நாடுகள் சபை ஒரு ஆடுகளமாக தான் மாறி இருக்கிறது, அதிகாரங்கள் மோதும் களமாகவும் இருந்து வருகிறது. ஜக்கிய நாடுகள் சபையானது இரு துருவ அரசியலுக்கு பிறந்த ஓர் குழந்தையாகும். உலக ஐக்கியத்தை நிலைநாட்ட உருவாக்கப்பட்டதாக கூறப்படுகிறது. அதாவது அமெரிக்கா ரசியா ஆகிய இரு பெரும் வல்லரசுகளும் பலமாக இருந்த வேளையில் உருவாக்கப்பட்ட ஒன்று ஆனால் பின்னர் ஏற்பட்ட ஒரு துருவ அரசியல் ஒழுங்கானது, அமெரிக்காவை மையங்கொண்ட உலக அரசியல் ஒழுங்கானது ஐ.நா சபையை ஒரு துருவ ஒழுங்கின் எண்ணங்களை பிரதிபலிக்கும் ஒன்றாக மாற்றி இருக்கிறது. அதே நேரம் ஐ.நா சபையும் நடு நிலையான உலக அமைப்பாக இயங்குவதில் பல தடவைகளில் தவறியிருக்கிறது. அவற்றில் ஒன்றுதான் ஈழத்தமிழர் விவகாரம். தமிழர்கள் முள்ளிவாய்க்காலில் வகை தொகை இன்றி இனப்படுகொலை செய்யப்பட்ட போது வெறும் பார்வையாளனாக இருந்து பார்த்துக்கொண்டிருந்தது ஐ.நா சபை என்பது யாவரும் அறிந்ததே, அதே நேரம் அண்மையில் உள்ளக அறிக்கை ஒன்றில் ஐ.நா இறுதிப்போரில் தனது கடமைகளை செய்ய தவறி இருக்கிறது என்பதை கூறியிருந்தது. இங்கே ஒரு விடயம் கவனிக்க வேண்டிய ஒன்று அன்று ஒரு அரசியல் சார் நிலைப்பாடுகளின் அடிப்படையிலேயே ஐ.நா அந்த இனப்படுகொலையை தடுக்க தவறி இருந்தது, இன்றும் அரசியல் சார் நிலைப்பாடுகளின் அடிப்படையிலேயே ஐ.நா வில் ஒப்புக்கொள்ளல்களும் இடம்பெற்று வருகிறது. ஆக ஐ.நா என்பது உலக உத்தமர்களின் மன்றமாக பார்க்க முடியாத ஒரு சூழலோடு அது உலக அமைதியை கட்டிகாத்தல் என்னும் தனது பிரதான நோக்கத்தை தவற விட்ட ஒன்றாகவுமே இருந்து வருகிறது. இந்நிலையில் அறத்தின் பாலான நீதி நெறி அடிப்படையில் இம்மன்றத்திடம் இருந்து நியாயத்தை எதிர் பார்க்க முடியாது. அதே நேரம் ஐ.நா மனித உரிமை ஆணையகத்துக்கு அதிகளாவான அதிகாரங்கள் இல்லை குறித்த ஒரு நாடு குற்றங்களில் ஈடுபட்டால் அவை தொடர்பாக தீர்மானங்களையே கொண்டுவர முடியும்.

### அமெரிக்காவின் உள்ளார்த்த நிலைப்பாடு

**அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த இஸ்ரவேலின் இந்திய இலங்கைக்கான தூதுவர், தமக்கும் இப்படி தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டது ஆனால் கொண்டுவரப்படதே ஒழிய எதுவும் நடைமுறை சாத்தியம் பெறவில்லை அது தொடர்பாக அஞ்ச தேவை இல்லை என்றவாறு கூறி சென்றிருக்கிறார். அதன் வெளிப்பாடாக சிறீலங்கா அமைச்சர் ஒருவர் நாம் இத்தீர்மானத்துக்கு அஞ்ச வேண்டியதில்லை இஸ்ரவேலுக்கு எதிராக இப்படி தீர்மானங்கள் வந்தது ஆனால் ஒன்றும் நடக்கவில்லை என்று ஊடக சந்திப்பு ஒன்றில் கூறி இருந்தார்**

அமெரிக்காவை பொருத்தவரையில் இலங்கையில் நடந்த போரில் பெருமளவான உதவிகளை வழங்கி இருந்ததோடு முழு யுத்தத்தையும் தன்னுடைய செய்மதி தொழில்நுட்பம் ஊடாக பார்வையிட்டுகொண்டுதான் இருந்தது, அதனிடம் அரசு படைகள் புரிந்த போர்குற்றங்களுக்கான அனைத்து ஆதாரங்களும் இருக்கின்றன. இந்நிலையிலே அமெரிக்காவின் போர் குற்றங்களுக்கான விசேட தூதுவர் ஸ்டீபன் ராப் இவ்வருட ஆரம்பத்தில் இலங்கைக்கு பிரயாணம் மேற்கொண்டார். அவர் அங்கு பலதரப்பட்டவர்களையும் சந்தித்ததோடு யுத்தம் நடந்த பிரதேசங்களையும் நேரில் சென்று பார்வையிட்டார். டி என் ஏ யை சந்தித்த அவர் சிறீலங்கா இளைத்த போர் குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிக்க சர்வதேச பொறிமுறை ஒன்றை வலியுறுத்தும் தீர்மானத்தை கொண்டுவருவதற்கு அமேரிக்கா தீவிர நடவடிக்கை எடுத்து வருவதாக கூறி இருந்தார், சிவில் சமூக பிரதிநிதிகளை சந்தித்த அவர் சர்வதேச விசாரணை கொண்டு வரப்படுவதில் உள்ள வரையறைகள் மற்றும் இடையூறுகளை அமெரிக்காவுக்கு அது தொடர்பாக இருக்கும் அரசியல் நெருக்கடிகளை சொல்லியிருந்தார். வழமைக்கு மாறாக ஒரு மிரட்டலை அவரூடாக அமெரிக்கா விட்டிருந்தது. இரணைப்பாலை சென் அன்ரனிஸ் மைதானத்தில் ராப் மற்றும் மிச்சேல் சேர்ந்து எடுத்த படங்களை டுவிட்டரில் வெளியிட்டு இறுதிக்கட்டபோரில் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இராணுவ பீரங்கி தாக்குதல்களால் கொல்லப்பட்டது இங்குதான் என்று கூறி இருந்தமை பெரும் சலசலப்பையும்,இலங்கைக்கான ஒரு அச்சுறுத்தலாகவும் அமைந்திருந்தது.

அதனை அடுத்து வந்த நிஷா டேஷாய் விஸ்வால் இறுதி ஊடக சந்திப்பில் சிறீலங்காவில் நல்லிணக்கம், ஜனநாயக ஆட்சி, நீதி மற்றும் பொறுப்புக்கூறலை வலியுறுத்தி, ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையில் அடுத்த மாதம் மூன்றாவது தீர்மானத்தையும் அமெரிக்கா கொண்டு வரும். அந்த தீர்மானத்தில் எந்தவகையான வாசகங்கள் இருக்கும் என்பதை இப்போது சொல்ல முடியாது. எனினும், அது சிறீலங்கா மக்களின் நட்புணர்வுடன் இசைந்து போவதாக இருக்கும்" என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இது இவ்வாறு இருக்க வரும் தீர்மானம் நிச்சயமாக பொருளாதார தடையாக இருக்காது என்று அறியப்படும் சூழலில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் தீர்மானம் அதாவது விசாரணை ஆணைக்குழு அமைப்பதற்கான தீர்மானம் கொண்டு வரப்படலாம் என்றும் எதிர்வு கூறப்படுகிறது. அப்படியானால் அதற்கு ஏற்ற சூழல் நிலவுகிறதா, என்று பார்ப்பது மிகவும் பொருத்தமானது.

அண்மையில் சிவில் சமூக பிரதிநிதிகளை சந்தித்த நிசா சர்வதேச பொறி முறை கோரும் தீர்மானம் கொண்டுவருது இப்போதைக்கு சாத்தியம் அற்ற ஒன்று எனவும் உள்ளக விசாரணைக்கான அனைத்து செயற்பாடுகளும் தோல்வி கண்ட பிற்பாடே சர்வதேச விசாரணை போக முடியும் என்னும் தொனிப்பட கூறி இருக்கிறார், ஆனால் ஏற்கனவே இரண்டு தடவைகள் உள்ளக விசாரணைக்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் அவர் இப்படி கூறி இருப்பது உள்ளக விசாரணைக்கான செயற்பாடுகள் தோல்வி அடையவில்லை என்பதற்கான அர்த்தத்தை கொடுப்பதாகவும் அமைகிறது.

அதே நேரம் இலங்கை சீனாவோடு கொஞ்சி குலாவினாலும் இதுவரையில் அமெரிக்காவின் ரிமோட் கன்ட்ரோலுக்கு அப்பாற் சென்று இன்னும் செயலிழந்து போகவில்லை இந்த ரிமோட் கன்ட்ரோல் எல்லைக்குள் வைத்துக்கொண்டே எப்படியாவது சிறிலங்காவை தனது கட்டளைகளுக்கேற்ப இயங்க வைப்பதே அமெரிக்காவின் நிலைப்பாடு இந்நிலையில் அமெரிக்கா பிரயோக்கிக்க கூடிய அதி உச்ச தன்மை போல தோன்றும் சர்வதேச விசாரணை கோரும் தீர்மானத்தை இப்போதே கொண்டுவருமா என்பது சந்தேகமே அப்படி கொண்டுவந்தால் இலங்கையை கட்டுப்படுத்தகூடிய தன் பக்கம் இழுக்கக்கூடிய நெம்பாக அமெரிக்கா எதனை பயன்படுத்தபோகிறது என்ற மற்றொரு முக்கியமான விடயமும் இங்கே இருக்கிறது.

### சிறிலங்காவின் நகர்வுகள்

தீர்மானம் வரப்படுவது உறுதியாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் அரசு அதன் கடுமை தன்மையை குறைப்பதற்காக, அதன் வலுத்தன்மையை நீர்த்துப்போக செய்வதற்காகசர்வதேசவிசாரணையை தடுக்க பல வழிகளிலும் தீவிரமாக செயற்பட்டு வருகிறது. அண்மையில் இந்தியா சென்ற ஜி எல் பீரிஸ் அங்கு சல்மான் குர்சித்திடம் சர்வதேச ரீதியில் போர்குற்ற விசாரணை வாராது தடுப்பதற்கு உதவுமாறு கோரியதோடு அங்கு 85 நாடுகளின் தூதுவர்களை சந்தித்ததாகவும் அறியமுடிகிறது. அப்போது இந்தியா உதவ மறுப்பு தெரிவித்ததாக கூறப்படும்போதும் எப்படியும் இந்திய இலங்கைக்கு திரை மறைவில் உதவத்தான் போகிறது.

அத்தோடு அமெரிக்காவுக்கு விஜயம் செய்த லலித் வீரதுங்க கால அவகாசம் கேட்டுள்ளதோடு, சர்வதேச விசாரணை வந்தால் உள் நாட்டில் பாரதூரமான குழப்பங்கள் வர சந்தர்ப்பம் இருப்பதாகவும் வழமையான சிறிலங்காவின் பாணியில் சொல்லி இருக்கிறார். அத்தோடு முன்னாள் போராளிகளை வைத்து விடுதலைப்புலிகளின் குற்றங்களை சொல்லும் வகையில் ஒரு ஆவணப்படமும் தயாரிக்கப்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது.

### இலங்கைக்கு முன்னுதாரணமான இஸ்ரவேல்

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த இஸ்ரவேலின் இந்திய இலங்கைக்கான தூதுவர், தமக்கும் இப்படி தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டது ஆனால் கொண்டுவரப்படதே ஒழிய எதுவும் நடைமுறை சாத்தியம் பெறவில்லை அது தொடர்பாக அஞ்ச தேவை இல்லை என்றவாறு கூறி சென்றிருக்கிறார். அதன் வெளிப்பாடாக சிறீலங்கா அமைச்சர் ஒருவர் நாம் இத்தீர்மானத்துக்கு அஞ்ச வேண்டியதில்லை இஸ்ரவேலுக்கு எதிராக இப்படி தீர்மானங்கள் வந்தது ஆனால் ஒன்றும் நடக்கவில்லை என்று ஊடக சந்திப்பு ஒன்றில் கூறி இருந்தார்

### நல்லது நடக்குமா தமிழர்களுக்கு ?

உண்மையில் சர்வதேச விசாரணை கொண்டுவரப்படுமாக இருந்தால் அது ஒரு விதத்தில் நன்மையானது அதாவது முதன்முறையாக சர்வதேச நாடுகளின் அங்கீகாரத்தோடு ஒரு விசாரணை அமைக்கப்படுவதென்பது, ஆனால் இது தமிழ் மக்களின் ஒட்டு மொத்த எதிர்பார்ப்பையும் நிறைவேற்றும் ஒன்றாக அமையாது மாறாக ஒரு விசாரணை அறிக்கையாகவே அமைய போகிறது. இந்த நிலையில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு நீதி கிடைக்க வேண்டுமாக இருந்தால் தமிழர்கள் பிரச்சனை ஐ.நா பாதுகாப்பு சபையில் விவாதிக்கப்பட வேண்டும் அப்போது தான் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக்கு நியாயத்தை கொள்ளமுடியும். அதற்காக தமிழர் தரப்பு தொடர்ச்சியாக தனது வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவேண்டும். இந்த அடிப்படையில் வரப்போகும் தீர்மானமானது சிறீலங்கா (சிங்கள) மக்களின் நட்புணர்வுடன் இசைந்து போவதாக அமையபோகிறது என்பதுதான் நிஜம்.

–ஈழமுரசு ––பெப்ரவரி

# ஜெனிவா தீர்மானம் – விரிவான பார்வை

இலங்கை தொடர்பில் கரிசனை உள்ள அனைவரினதும் கவனத்தை ஈர்த்த 27 ஆவது ஜெனிவா தீர்மானம் பலத்த விவாதங்களை உருவாக்கி ஒவ்வொரு நாடுகளினதும் நலன்கள் எவ்வாறு மற்றைய நாடுகள் மக்கள் சமூகங்களில் முக்கியமானது என்பதை வெளிப்படுத்தியவாறு நடந்துமுடிந்திருக்கின்றது.

A/HRC/25/L.1 என்ற ஜெனிவா தீர்மானமானது ஜெனிவாவின் மனிதவுரிமைகளுக்கான 25ஆவது மாநாட்டில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. அமெரிக்கா, பிரித்தானியா, கனடா உட்பட 41 நாடுகள் முன்வைத்த இத்தீர்மானத்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு 23 நாடுகள் ஆதரித்தும் 12 நாடுகள் எதிர்த்தும் 12 நாடுகள் நடுநிலையும் வகித்துள்ளன.

### ஐக்கியநாடுகள் மனிதவுரிமை சபை

ஐக்கியநாடுகள் மனிதவுரிமை சபை என்பது 47 நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஐக்கிய நாடுகள் சபையின் ஓர் இணை அமைப்பாகும். ஐக்கியநாடுகளின் உறுப்புரிமை நாடுகளில்மனிதவுரிமைகளைமேம்படுத்தலும்பாதுகாத்தலும் இதற்கான பணியாகும். மனிதவுரிமைகளை அதியுச்சமாக மதிக்கின்ற நாடுகளே இதற்கான அங்கத்துவத்தை பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றபோதும் அதுவோர் சாத்தியமற்றவிடயமாகவே இருந்துவருகின்றது.

ஒரு நாட்டின் அங்கத்துவம் 3 ஆண்டுகளுக்கு நீடிக்கும். இரண்டு தடவைகளுக்கு மேல் அதன் அங்கத்துவம் அடுத்தடுத்து நீடிக்கமுடியாது. இவ்வாறு தற்போதுள்ள 47 நாடுகள் இத்தீர்மானத்தில் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர்.

### வாக்களித்த நாடுகள்

ஆஜன்ரீனா, ஒஸ்ரியா, பெனின், பொற்ஸ்வானா, பிறேசில், சிலி, கொஸ்ரா றிக்கா, ஐவரி கோஸ்ற், செக் குடியரசு, எஸ்தோனியா, பிரான்ஸ், யேர்மனி, அயர்லாந்து, இத்தாலி, மெக்சிக்கோ, மொன்ரநெக்ரோ, பெரு, தென்கொரியா, ரொமானியா, சியரா லியோன், மசடோனியா, பிரித்தானியா, அமெரிக்கா ஆகிய நாடுகள் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தன.

சீனா, ரஷ்யா, கொங்கோ, அல்ஜீரியா, கென்யா, மாலைதீவுகள், பாகிஸ்தான், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், வெனிசுவேலா, வியட்நாம், கியூபா ஆகிய நாடுகள் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்தன.

இந்தியா, இந்தோனேசியா, ஜப்பான், தென் ஆபிரிக்கா, கஸ கஸ்தான், குவைத், மொராக்கோ, நமீபியா, பிலிப்பைன்ஸ், புர்கினா பாசோ, காபோன், எதியோப்பியா ஆகிய நாடுகள் இத்தீர்மானத்திற்கான வாக்கெடுப்பில் விலகியிருந்தன.

இத்தீர்மானத்தில் வாக்களித்த எதிர்த்த விலகிநின்ற நாடுகளை பற்றி கருதுவதற்கு அப்பால் இத்தீர்மானத்தை முன்கொண்டுவந்த நாடுகளை கவனிக்கவேண்டும்.

**ஆனால் இந்தியா இப்போது அந்தச்சிலருக்கும் அதிர்ச்சி வைத்தியம் கொடுத்திருக்கின்றது. இத்தீர்மானத்திலிருந்து விலகிநின்றதன் மூலம் இந்தியா எந்தளவிற்கு இலங்கை அரசுடனான உறவிலிருந்து விலகிநிற்கும் என்பதையும் எந்தளவிற்கு தமிழர்கள் விடயத்தில் கிட்டவரும் என்பதையும் காட்டியுள்ளது. அதனைவிட இத்தீர்மானத்தின்போது உண்மையில்**

அல்பானியா, ஒஸ்ரியா, பெல்ஜியம், பல்கேரியா, குரோசியா, சைப்பிரஸ், டென்மார்க், எஸ்ரோனியா, பின்லாந்து, பிரான்சு, ஜோர்ஜியா, ஜேர்மனி, கிறீஸ், ஹங்கேரி, ஐஸ்லாந்து, அயர்லாந்து, இத்தாலி, லத்வியா, லீச்ரென்சிரின், லித்துவேனியா, லக்ஸ்சம்பேர்க், மொறிசியஸ், மொன்றியாகோ, நெதர்லாந்து, நோர்வே, போலந்து, போர்த்துக்கல், ரொமேனியா, செயின்ற்கிற்ஸ் நீவிஸ், சியாரா லியோன், ஸ்லோவாக்கியா, ஸ்பெயின், சுவீடன், சுவிஸ்லாந்து, மசிடோனியா, பிரித்தானியா, வடஅயர்லாந்து, அமெரிக்கா ஆகிய 38 நாடுகளே இத்தீர்மானத்தை இணைந்து முன்வைத்தன.


தீர்மானத்திற்கு வாக்களித்த நாடுகளை கருதுவதற்கு அப்பால் இத்தீர்மானத்தை முன்வைத்த நாடுகளின் அடிப்படையிலேயே இத்தீர்மானத்தின் செயற்பாட்டுத்திறன் இருக்கப்போகின்றது. ஏனென்றால் தீர்மானத்தை முன்வைத்த நாடுகளே இலங்கையரசில் கூடுதலாக செல்வாக்கு செலுத்தக்கூடிய நாடுகளாக இருக்கின்றன.

### இந்தியாவின் உண்மைமுகம்

இந்தியாவை சரியாக புலிகள் கையாளவில்லை என்றும் உரிய முறையில் கையாண்டிருந்தால் தமிழீழத்தை இந்தியாவே பெற்றுத்தந்திருக்கும் என வாதிடுவோர் இன்றும் உண்டு.

முள்ளிவாய்க்காலில் முடக்கப்பட்ட ஈழவிடுதலைக்கான ஆயுதவிடுதலைப் போராட்ட காலம் வரை இந்தியாவின் நல்லமனதை காட்டமுடியாமல் இருந்ததாகவும் அதனால் இனிமேல் இந்தியஅரசு தமிழர்களை மீட்டுவிடும் என்ற நம்பிக்கை இப்போதும் சிலரிடம் உண்டு.

இந்தவகையிலேதான் இந்தியாவுடன் எப்போதும் ஓர் நெருக்கமான தொடர்பாடலை தற்போதைய தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைமை பேணிவருகின்றது.




ஆனால் இந்தியா இப்போது அந்தச்சிலருக்கும் அதிர்ச்சி வைத்தியம் கொடுத்திருக்கின்றது. இத்தீர்மானத்திலிருந்து விலகிநின்றதன் மூலம் இந்தியா எந்தளவிற்கு இலங்கை அரசுடனான உறவிலிருந்து விலகிநிற்கும் என்பதையும் எந்தளவிற்கு தமிழர்கள் விடயத்தில் கிட்டவரும் என்பதையும் காட்டியுள்ளது. அதனைவிட இத்தீர்மானத்தின்போது உண்மையில் இந்தியா நடைமுறை யதார்த்தத்தில் எதிர்த்தே வாக்களித்திருந்தது.

கடந்ததடவைமுன்வைக்கப்பட்ட"நீர்த்துப்போனதீர்மானத்திற்கு" இந்தியா ஆதரவளித்திருந்தது. இம்முறை முக்கியமான இத்தீர்மானத்தில் திருத்தங்களை கொண்டுவருவதற்கு இரண்டு தடவைகள் நடத்தப்பட்ட திருத்தவாக்கெடுப்பின்போது இந்தியா இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்திருந்தது. இத்தீர்மானத்தை ஒத்திவைக்கவேண்டும் என்று நடத்தப்பட்ட வாக்கெடுப்பிலும் ஐக்கியநாடுகள் மனிதவுரிமை உயர் ஸ்தானிகரால் விரிவான விசாரணை நடத்தப்படவேண்டும் என்ற விடயத்தை நீக்குவது தொடர்பான வாக்கெடுப்பிலும் இலங்கைக்கு ஆதரவாகவே இந்தியா வாக்களித்திருந்தது என்பது மிகமுக்கியமானது.

அதேவேளை இந்தியாவை விட்டும் எங்களால் இலங்கை பற்றிய தீர்மானத்தை முன்னகர்த்த முடியும் என்பதை அமெரிக்க சார்பு நாடுகள் வெளிக்காட்டியுள்ளன. இது ஒருவகையில் இந்தியாவிற்கு சவாலான விடயமே.

எனினும் இத்தீர்மானத்தின் ஊடாக இந்தியா எடுத்த முடிவானது தற்போதுள்ள காங்கிரஸ் ஆட்சியின் வெளியுறவுக்கொள்கையா அல்லது இந்திய வெளியுறவுக்கொள்கையே அத்தகையதா என்பதை இன்னும் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். அடுத்துவரும் இந்திய மத்தியஅரசுக்கான தேர்தல்களை தொடர்ந்து அதற்கான பதில்கள் கிடைக்ககூடும்.

இந்தியாவிற்கு அப்பால் தென்னாபிரிக்கா இத்தீர்மானத்தில் விலகிநின்றமை தமிழர்களை பொறுத்தளவில் ஏமாற்றமளிக்கின்ற விடயமே. அதனைவிட உறுப்புநாடாக இல்லாதபோதும் அவுஸ்திரேலிய அரசின் தனது அரசியல்நலன் சார் நகர்வாக சிறிலங்காவிற்காக பேச வெளிப்பட்டுநிற்பதும் இன்னொரு கசப்பான விடயமே.

### தீர்மானத்தில் என்ன உள்ளது?

தற்போது நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை சபையின் உயர் ஸ்தானிகரை "இலங்கையில் எல்லஎஆர்சியின் கவனத்திற்குரிய காலத்தில் நடைபெற்ற கடுமையான மனிதவுரிமை மீறல்கள் பற்றி முழுமையான விசாரணைப்பொறிமுறையை" நடத்துமாறு கோருகின்றது. அப்படியானால் குறிப்பாக 2002 - 2009 ஆண்டுவரை நடைபெற்ற மோசமான மனிதவுரிமை மீறல்களை மட்டுமே விசாரணை செய்யுமாறு கோருகின்றது.

அத்தோடு இலங்கையின் மனிதவுரிமை விடயங்களையும் அதன் முன்னேற்றப்படிநிலைகளையும் கண்காணிக்குமாறும் மனிதவுரிமைச்சபையின் உயர்ஸ்தானிகர் கேட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறான விசாரணை மற்றும் கண்காணிப்பு தொடர்பான வாய்வழிமூலமான அறிக்கையை எதிர்வரும் செப்ரம்பர் மாதத்தில் நடைபெறும் 27 வது கூட்டத்தொடரின்போதும் முழுமையான செயற்பாட்டு அறிக்கையை அடுத்தாண்டு மார்ச் மாதத்தில் நடைபெறும் 28 வது கூட்டத்தொடரின்போதும் சமர்ப்பிக்குமாறும் உயர் ஸ்தானிகர் கேட்கப்பட்டுள்ளார்.

எனவே இத்தீர்மானமானது அதனது பிரயோகநிலையில் அதனது அமுலாக்கத்தை வேண்டிநிற்பதானது ஆரோக்கியமான விடயமாக கணிக்கப்படுகின்றது.

### மகிந்த அரசு எப்படி எதிர்கொள்ளப்போகின்றது?

இத்தீர்மானத்தை உடனடியாகவே நிராகரிப்பதாக மகிந்த அரசாங்கம் அறிக்கைவிட்டபோதும் அத்தகைய ஒரு நிலையை தொடர்ந்தும் பேணுமா என்பது கேள்விக்குறியே. ஆனால் அவ்வாறான இறுக்கமான நிலையை எதிர்கொள்வதற்கு ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைச் சபைக்கு எத்தகைய அதிகாரங்கள் உள்ளன? உள்நாட்டில் அனுமதிக்கப்படும் ஒரு விசாரணைப்பொறிமுறையை நிறைவேற்றக்கூடிய சூழல் உண்டா? என்ற கேள்விகள் எழுகின்றன.

### முடிவு

"மனிதவுரிமை மீறல்கள் என்பதற்கும் சர்வதேச மனிதவுரிமை மீறல்கள் என்பதற்கு வேறுபாடு உள்ளது என்றும் சர்வதேச மனிதவுரிமை மீறல்கள் பற்றிய விசாரணையாக இருக்கும்போதே போர்க்குற்றங்கள் பற்றிய விசாரணைகள் உள்ளடக்கப்படலாம் எனவும் இது ஆபத்தான வேண்டுமென்றே இலங்கையரசை காப்பாற்றுவதற்காக தவிர்க்கப்பட்டிருக்கின்றது" என்கிறார் தமிழ்த்தேசிய மக்கள் முன்னனியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

அத்தோடு இத்தீர்மானத்தில் தமிழ்மக்கள் என்ற ஒரு இனக்குழுமம் பற்றியோ அதனது அரசியல் அபிலாசைகள் பற்றியோ குறிப்பிடப்படவில்லை. இதன்மூலம் மீண்டும் இலங்கையரசின் அரசியலமைப்பை ஏற்றுக்கொள்வதுடன் அதன் கட்டமைப்புக்குள்ளேயே தீர்வுகளை காணுமாறும் இத்தீர்மானம் வற்புறுத்துகின்றது.

உதாரணமாக வடமாகாணசபை உட்பட இலங்கையின் 9 மாகாணசபைகளும் இலங்கை அரசியல் யாப்பின் 13 வது திருத்தசட்டத்திற்கு அமைய வினைத்திறனுடன் செயலாற்றவிடும்படி இலங்கையரசை கேட்டுக்கொள்கின்றது. இதன்மூலம் இலங்கை என்ற தீவில் தமிழர்களின் தேசியப்பிரச்சனையை சிறுமுரண்பாடாக காட்டி உருப்படியான தீர்வுபற்றி கதைப்பதை தவிர்த்துவிட்டுள்ளது. இது முன்னைய தீர்மானங்களிற்கும் தற்போதைய தீர்மானத்திற்குமான மிகப்பாரிய வேறுபாடாகும்.

எனவே இத்தீர்மானமானது தமிழர்களுக்கு ஒரு வெற்றியாகவும் சிறிலங்கா அரசுக்கு பாரிய தோல்வியாகவும் காட்சியளித்தாலும்

# இரண்டு தேசங்களின் அபிவிருத்தி—ஓர் பார்வை

போருக்கு பின்னரான தமிழர் தாயக அபிவிருத்தியும் இராணுவப் பிரசன்னமும் என்பது ஓர் பாரிய அச்சுறுத்தலையும் அதனூடான செய்திகளையும் எங்களுக்கு வெளிக்காட்டி நிற்கின்றது. போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதாக சிறீலங்கா அரசால் பிரகடனப்படுத்தப்பட்டு 5 வருடங்களை கடந்துள்ள நிலையில் தமிழர் தாயக பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட வாழ்வாதார முன்னேற்றம் என்பது பாரிய கேள்வியையும் அச்சுறுத்தலையும் வழங்குவதாக உள்ளது.

இங்கு விளக்கத்துடன் குறிப்பிடப்படும் ஒவ்வொரு புகைப்படங்களும் தமிழர்கள் எதிர்காலம் தொடர்பாகவும் இன நல்லிணக்கம், அபிவிருத்தி, அதிகாரபகிர்வு சம்பந்தமாக கருத்துரைக்கும் ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டிய செய்தியாகும். இங்கு அபிவிருத்தி என்ற போர்வையில் சிறீலங்கா அரசால் தென்பகுதியில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி செயற்பாடுகளும் அதனோடிணைந்த

இந்தியா 50ஆயிரம் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவிருப்பதாக சொல்லப்பட்டபோதும் இதுவரை அதில் மூன்றில் ஒரு பகுதியைக்கூட அவர்களால் பூர்த்திசெய்ய முடியவில்லை என்பதோடு அந்த வீடுகள்கூட அமைச்சர்களின், பாதுகாப்பு செயலகத்தின் தலையீட்டினால் வடக்கு கிழக்கு எல்லையோர சிங்கள ,முஸ்லீம் கிராமங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

போரினால் இடம்பெயர்ந்து மீள்குடியேறிய வடக்கு கிழக்கு மக்களுக்கு என்று சொல்லி உலக நாடுகளிலிருந்து பெறும் கடன்கள் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சுக்கு என்ற போர்வையில் அவ் அமைச்சரான கோத்தபாய ராஜபக்சேயின் கீழ் கொண்டுவரப்பட்டு அது தென்பகுதியிலுள்ள சிங்களவர்களுக்கும்,முப்படையினருக்குமாக செலவிடப்படுகின்றன.

2009ஆம் ஆண்டிற்கு பின்னர் தெற்கில் இதுவரை 80000வீடுகள் வரை திட்டமிடப்பட்டு பெருமளவான வீடுகள் சகல வசதிகளுடனும் அமைக்கப்பட்டு படையினருக்கும் சிங்கள மக்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. அபிவிருத்தி என்ற போர்வையில் கொழும்பிலும் அம்பாந்தோட்டையிலும் பல அதிவேக நெடுஞ்சாலைகளும் சிங்கள மாதிரி குடியேற்ற திட்டங்களும், விமான நிலையங்களும், துறைமுகங்களுமாக அரசு தனது மக்களின் தேவைகளை மாத்திரம் பூர்த்தி செய்து வருகின்ற நிலையில் வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களின் நிலையில் எந்த முன்னேற்றமும் காணப்படவில்லை.

அவர்களுக்கு அரசால் மீள்குடியமரும்போது சில பகுதிகளில் வழங்கப்பட்ட 12 தகரங்கள் மற்றும் உலகவங்கியால் வழங்கப்பட்ட இருபத்தைந்தாயிரம் ரூபா பணத்தினை தவிர எந்த உதவிகளும் இன்றுவரை செய்துகொடுக்கப்படவில்லை. இராணுவத்தினர் வீடமைத்து கொடுப்பதாக கூறி சில இடங்களில் தரமற்ற வகையில் 3இலட்சம் பெறுமதியான வீடுகள் அமைக்கப்பட்டு இராணுவ அதிகாரிகளின் பெயர்கள் அவ்வீதிகளுக்கு சூட்டப்படுகின்றது. விதவைகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்குவதாக கூறி அவர்களின் வீடுகளுக்கு படையினர் அடிக்கடி செல்லும் நிகழ்வுகள் அரங்கேறுகின்றன.

உண்மையிலேயே வடக்கில் முப்பத்தைந்தாயிரம் விதவைகள் இருப்பதாக சொல்லப்படுகின்றது. அவர்களுக்கான வாழ்வாதார உதவி திட்டங்கள் எதுவும் இதுவரை அரசாலோ அல்லது வடமாகாணசபையை பொறுப்பேற்றுள்ள த.தே.கூட்டமைப்பாலோ இதுவரை முன்மொழியவோ நடைமுறைப்படுத்தவோ முடியவில்லை. இவர்களில் சிலரை இராணுவத்திற்கு இணைக்கும் திட்டம் மட்டும் திட்டமிட்டு அரசால் மேற்கொள்ளப்படுகின்றது.

பாடசாலைகள்கூட சில அரச சார்பற்றநிறுவனங்கள் உதவுகின்றபோதும்அதில்அரசின்பங்களிப்புஎன்பதுபாரிய வேற்றுமை காட்டப்படுகின்றது. பாடசாலை சிறுவர்களுக்கு அப்பியாச கொப்பிகள் வழங்கும் போர்வையில் மகிந்த ராஜபக்சேயின் மகன் நாமல் ராஜபக்சேயின் புகைப்படம் இருபக்கமும் பொறிக்கப்பட்டவாறு லமினேற் செய்யப்பட்டு வழங்கப்படுகின்றது. தலைமைத்துவ

அரசின் அபிவிருத்தி நடைமுறைப்படுத்தப்படுவதாக தெரிவிக்கும் பகுதிகளான வடக்கு கிழக்கில் அரசால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைகளையும் இங்கு காணலாம்.

தலைமைத்துவ வகுப்புகள் என்ற போர்வையில் வடக்கிலிருந்து தமிழ் மாணவர்கள் அழைத்துச்செல்லப்பட்டு இராணுவமுகாமில் வைத்து இராணுவப்பயிற்சி வழங்கப்படுகின்றது. இதன் மூலம் நாட்டின் ஒருமைப்பாட்டை பேணி அனைவரையும் தமது நாட்டின் பற்றாளர்களாக மாற்றிவிடுவதாக நம்புகிறார்கள் அம்மாணவர்கள் வயது 13 முதல் 18 வரையானவர்கள் பயிற்சிக்காக தென்பகுதிக்கு அழைத்துச்செல்லப்படுகின்றனர்.


இங்கு முக்கியமாக அரசால் பிரதானமாக பிரச்சாரப்படுத்தப்பட்ட ஏ9 வீதி, மற்றும் புகையிரதப்பாதை புனரமைப்பு என்ற பிரதான கட்டமைப்பை தவிர அரசால் சொல்லப்பட்ட மீள்குடியேற்றம் பூர்த்தி செய்யப்பட்டதாக பிரச்சாரப்படுத்தப்பட்டபோதும் இதுவரை அரசால் அவர்களுக்கான ஒரு வீட்டுத்திட்டத்தையேனும் அமுல்படுத்த முடியவில்லை. ஆனால் இந்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட வீட்டுத்திட்டத்தை காட்டி பிரச்சாரம் செய்து அது அரசின் அபிவிருத்தியாக காட்டிக்கொள்கின்றது. ஆனால் இந்தியன் வீட்டுத்திட்டம்கூட ஒருபகுதி மக்களின் தேவைகளையே பூர்த்திசெய்ய போதுமானது.

இது தமிழ்ப் பாடசாலை மாணவர்களுக்கான ஆயுதப்பயிற்சி நடைபெறும் சம்பவங்களிற்கு ஒரு சான்று 06.05.2012 இல் யாழ் சென்ஜோன்ஸ் கல்லூரி மாணவர்களுக்கு திஜதலாவயில் இடம்பெற்றபோது. 8ம் 9ம் ஆண்டு மாணவர்களையே காண்கின்றீர்கள் வயது 14-16 வரை (ஏனைய பாடசாலை படங்களும் உள்ளது)





தமிழ் மாணவர்களின் உடல் நல விசாரிப்புக்காக பதிவு இராணுவ மருத்துக பிரிவால் நடைபெற்றபோது.



மாவீரர் தினத்திற்கு முதல்வாரம் கைது செய்யப்பட்ட நான்கு மாணவர்களில் ஒரு பெற்றோரை யாழ் கட்டளை தளபதி முன்னிலையில் ஈ.பி.டி.பி ஆல் நியமிக்கப்பட்ட துணைவேந்தர் விசாரிக்கும்போது.



இது ஆலைய நிகழ்வில் இராணுவத்தினர் அத்துமீறி உள்நுழையும் செயற்பாடுகளில் ஒன்று. 27.02.2014 இல் யாழ் கீரிமலை ஆலையத்தில் திருவிழாவின்போது இராணுவத்தினர் தமது கலாச்சார உணவுகளை திணிக்கும் காட்சி.



எந்த சந்திப்பிலும் இவர்கள் முன்னிலை காணப்படும்.



பெண்கள் பாடசாலைக்குள் வந்து இராணுவத்தினர் கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் நிகழ்வுகளில் ஒன்று.

பயிற்சி என்ற வகையில் மாணவர்களுக்கு ஆயுதப்பயிற்சி வழங்கப்படுகின்றது. பாடசாலையில் மருத்துவ முகாம் என்ற வகையில் பாடசாலையில் இராணுவத்தினர் அத்துமீறி விபரங்களை பெற்றுவருவதால் மாணவர்கள் அச்சமடைகின்றனர். சகல விழாக்களுக்கும் அவர்கள் பிரதம அதிதிகளாக கலந்துகொள்ளும் சம்பவங்கள் நடந்தேறுகின்றன.

இவ்வாறு ஒரு தேசத்தின் மீதான அழிவுகளையும் அடக்குமுறைகளையும் கூர்மைப்படுத்திக்கொண்டு இரண்டு தேசங்களாக பிளவுபட்டுப்போயுள்ள நாட்டை செயற்கைத்தனமாக அடாவடித்தனமாக ஒட்டவைக்கும் முயற்சிகள் எந்தளவிற்கு பயனளிக்கும்?

-சக்கரவர்த்தி-

குறிப்பு:-

இணையத்தில் இதே தலைப்பில் அமைந்த கட்டுரையில் இணைக்கப்பட்டுள்ள புகைப்படத்துடன் கூடிய விளக்கங்களை உடைய கோப்பினை பார்வையிடுவதன்மூலம் இங்கு இடம்பெறும் அடக்குமுறைகளையும் அபிவிருத்தி என்ற போர்வையிலான அழிப்பு நடவடிக்கையினையும் நன்கு அறியலாம்.

இது வவுனியாவில் அமைக்கப்பட் "புத்த கிராமம்" இதற்காக குடியேற்றப்பட்டவர்களுக்கு தேவையான சகல வாழ்வாதார உதவிகளை வழங்கிய வடக்கின் ஆளுனர் பின்னர் அங்கு அமைக்கப்படவிருக்கும் பொது மண்டபங்களுக்கான அடிக்கல் நாட்டும்போது. இதுவும் இவ்வாண்டில்தான் 16.01.2014.



'Api Wenuwen Api' என்ற பெயரிலான வீட்டுத்திட்டம். இது நுகேகல என்ற இடத்தில் இராணுவத்தினருக்காக 700 வீடுகளை கொண்ட திட்டத்தில் அமைந்த 100வீடுகளை சனாதிபதி கையளிக்கும் நிகழ்வு 03.06.2013 இல் நடைபெற்றது.



இந்த நிலைமை தான் வடக்கு கிழக்கில் நிலவுகின்றது போர் முடிவடைந்து 5 வருடங்கள் கடந்த நிலையிலும் பெருமளவான மக்கள் இன்னமும் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்படாமல் இருக்கின்றனர். இந்தியன் அரசு 50,000 வீடுகளை அமைத்து தரவுள்ளதாக அறிவித்தபோதும் இதுவரை 17470 வீடுகளே பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அதில்கூட 3740 வீடுகள் எல்லையோர கிராமங்கள் என்றவகையில் சிங்களவர்களுக்காக அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது. மற்றும் 6000 வீடுகள் வரை அரச சார்பற்ற நிறுவனங்களும் அமைத்து கொடுத்துள்ளனர்.



இதுதான் இலங்கை அரசின் 12 தகர திட்டத்தை தவிர இதுவரை அரசால் எந்த உதவியும் வழங்கப்படவில்லை




இங்கே நீங்கள் பார்க்கும் குடும்பம் வட்டக்கச்சி மாயவனூர் கிராமத்தில் இவ்வாறான கணவனையிழந்த குடும்பங்கள் வடக்கில் 35000 பேர் அரச உதவி இல்லை ஆனால் வீட்டுக்கொருவர் இராணுவத்திற்கு தேவையாம் முறைப்பாடு செய்கின்றனர் மாகாண விவசாய அமைச்சரிடம்.




100ஏக்கர் காணி வவுனியாவில் இராணுவத் தேவைக்காக





இது மன்னாரில் மக்களின் காணிகளை இராணுவத்தினர் தமது தேவைக்கு பெறும் நடவடிக்கை மக்களை அசுசுறுத்த அவர்களை புகைப்படம் எடுக்கும் கடற்படை



இது உயர் பாதுகாப்பு வலையம் என அறிவித்த வலிகாமம் பகுதியிலுள்ள விவசாய நிலங்களில் இராணுவ விவசாய பயிர்ச்செய்யையை பார்வையிடும் சிங்கள ஆளுனர். யாழ் கட்டளைக் களபகி



இது யாழில் இராணுவ தேவைக்காக பெருமளவு பால் கொள்வனவு. துமிழர்களுக்கு……..???????



இது அவர்களால் உயர்பாதுகாப்பு வலையத்தில் விளைவிக்கப்பட்டதை விற்பனைசெய்யும் காட்சி

## தமிழர்கள் கான்பராவில் பேரணி! அவுஸ்திரேலிய அரசியல் தலைவர்கள் பங்கேற்பு!



அவுஸ்திரேலியாவின் கான்பராவில் 19-03-2014 செவ்வாய்க் கிழமை அன்று மதியம் 12.00 தொடக்கம் 2.00 மணிவரை நாடாளுமன்றத்திற்கு முன்பாக சிட்னி, மெல்பேன், கான்பெரா மாநிலங்களில் இருந்து நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் ஒன்று கூடி ஐ.நா வில் மனித உரிமை சபையில் எடுக்கப்போகின்ற தீர்மானத்தில் போர்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், இனஅழிப்பு ஆகியவற்றுக்கு சுயாதீன விசாரணைசெய்ய வேண்டும் என்று வலியுறுத்தியும் அவுஸ்திரேலியா அரசாங்கம் இந்த தீர்மானத்தை ஆதரிக்க வேண்டும் என்றும் கோரிக்கைகளை முன்வைத்தும் பதாதைகளை தாங்கியவாறு மாபெரும் பேரணி ஒன்றை நடத்தினார்கள்.

இதேநேரத்தில் அரசியல் செயற்பாட்டாளர்கள் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் 26 நாடுகளின் தூதரகங்களுக்கு சென்று மேற்கூறிய கோரிக்கைகளை கையளித்து அவர்களின் ஆதரவை வேண்டி மனுக்கள் கையளிக்கப்பட்டன.இந்த பேரணியின்போது அவுஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டார்கள். இப்பேரணியில் **Philip Ruddock, Craig Laundy** மற்றும் **Craig Kelly** ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் லிபரல் கட்சியிலிருந்தும், **Michelle Rowland** என்ற நாடாளுமன்ற உறுப்பினர் லேபர் கட்சியிலிருந்தும், கட்சித்தலைவர் **Christine Milne** மற்றும் செனட்டர் **Lee Rhiannon** ஆகியயோர் கிறீன் கட்சியிலிருந்தும் செனட்டர் **John Madigan** சனநாயக லேபர் கட்சியிலிருந்தும் உரை நிகழ்த்தினார்கள்.

அதனைதொடர்ந்து அவுஸ்திரேலிய தமிழ் மக்கள் உணர்வுகளை வெளிப்படுத்தியவாறு கோசங்கள் எழுப்பி ஊர்வலமாக பிரித்தானிய, கனடா, அமெரிக்கா, இந்தியா, சவுத் ஆபிரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய தூதரகங்களுக்கு சென்று மனுக்களை உயர்ஸ்தானிகர்களோடு கலந்துரையாடி கையளித்தினர். இறுதியில் தமிழீழம் கிடைக்கும்வரை உறுதியுடன் எமது போராட்டங்களை ஓய்வின்றி தொடருவோம் என்ற உறுதி மொழியுடன் பேரணி நிறைவுபெற்றது.

இதேவேளை இன்றைய தினம் அவுஸ்திரேலிய செனட்சபையில் ஒத்திவைப்பு பேரணையை முன்வைத்து உரையாற்றிய செனட்டர் **Sam Dastyari** சிறிலங்காவில் தொடர்ந்துவரும் தமிழர்மீதான அரச அடக்குமுறைகளை முடிவுக்கு கொண்டுவர ஐநாவில் கொண்டுவரப்படவுள்ள சர்வதேச விசாரணை கோரும் பிரேரணையில் அவுஸ்திரேலிய ஆதரவளிக்கவேண்டும் எனக்கேட்டுக்கொண்டார். அத்துடன் தற்போது தமிழர் தாயகத்தில் தொடர்ந்து வரும் கைதுகளையும் சிறுமி விபுசிகா உட்பட பல பெண்கள் கைதுசெய்யப்பட்டதையும் சுட்டிக்காட்டி உரையாற்றினார்.

## த.தே.கூட்டமைப்பின் பேச்சாளர் திரு சுரேஸ் பிரேமச்சந்திரனுடனான நேர்காணல்

9ம் பக்க தொடர்ச்சி..........

**பதில்**

சிறிலங்கா கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் ஒன்லைன் மூலம் இலங்கையின் வாக்காளர்களாக பதியும்படி கேட்டுக்கொள்கின்றோம். புலம்பெயர்ந்த நாடுகளில் அண்ணளவாக 10 இலட்சம் ஈழத்தமிழ்மக்கள் வாழ்கின்றார்கள்.

1981 இல் ஏழு இலட்சம் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தார்கள். தற்போது ஆறரை இலட்சம் மக்களே இருக்கின்றார்கள். இது உண்மையில் 15 இலட்சமாக இருந்திருக்கவேண்டும்.

முன்னர் யாழ்மாவட்டத்திற்கு ஒன்பது நாடாளுமன்ற பிரதிநிதிகள் ஒதுக்கப்பட்டிருந்தார்கள். தற்போது அது ஆறாக குறைக்கப்பட்டுள்ளது. இதேபோல யாழ் பல்கலைக்கழகத்தில் தமிழர்கள் அல்லாதவர்களை இணைக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இரண்டாவதாக தாயகத்தில் ஒரு பலமான அரசியல்கட்டமைப்பை பலப்படுத்தவேண்டிய தேவையை உணர்ந்து அதனை ஏற்படுத்துமாறு நீங்கள் அழுத்தங்களை ஏற்படுத்தவேண்டும். அதேபோல புலம்பெயர்ந்த நாடுகளில் பல்வேறு அமைப்புக்களாக பிரிந்துநின்று செயற்படாமல் இணைந்துநின்று செயற்படவேண்டும் எனக்கேட்டுக்கொள்கின்றேன்.

## ஜெனிவா தீர்மானம் – விரிவான பார்வை

6ம் பக்க தொடர்ச்சி...........

அதன் நடைமுறை யதார்த்தத்தில் தமிழர்களின் உடனடி பிரச்சனைகளான கைதுகள் காணாமல்போதல் பற்றியோ அல்லது நீடித்த நிலையான சமாதானத்திற்கான உருப்படியான தீர்வுபற்றியோ பேசப்படாமல் மீளவும் காத்திருப்பு நோக்கியதாகவே தமிழர் வாழ்வு நகரப்போகின்றது.

**- வேங்கைச்செல்வன்-**

குறிப்பு:

ஐக்கியநாடுகள் மனிதவுரிமை சபையில் 2015 ஆம் ஆண்டில் உறுப்புரிமை முடிவடையும் நாடுகளும் புதிதாக வரும் நாடுகளும் விபரம் வருமாறு

உறுப்புரிமை முடிவடையும் நாடுகள்

*•African States: Cameroon, Djibouti, Mauritius, Nigeria and Senegal.*
*•Asian States: Bangladesh, China, Jordan, Kyrgyzstan and Saudi Arabia.*
*•Eastern European States: Hungary and the Russian Federation.*
*•Latin American & Caribbean States: Cuba, Mexico and Uruguay.*
*•Western European & Other States: United States, Belgium, Norway and Turkey.*

புதிய ஆண்டில் இணையும் நாடுகள்

*•African States: Côte d'Ivoire, Ethiopia, Gabon, Sierra Leone, Kenya*
*•Asian States: Japan, Kazakhstan, Pakistan, Republic of Korea, United Arab Emirates*
*•Eastern European States: Estonia, Montenegro*
*•Latin American & Caribbean States: Argentina, Brazil, Venezuela*
*•Western European & Other States: Germany,Ireland ,United States.*

## ஈழத்தில் தமிழர் மீதான தொடரும் அடக்குமுறைக்கு எதிராக நீதி கேட்டு மெழுகுவர்த்தி ஏந்திய கவனயீர்ப்பு








ஈழத்தில் தமிழர் மீதான தொடரும் அடக்குமுறைக்கு எதிராக நீதி கேட்டு மெழுகுவர்த்தி ஏந்திய கவனயீர்ப்பு ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த 28 - 03 - 2013 அன்று மாலை 7 மணி தொடக்கம் 8 மணிவரை மெல்பேணின் டாண்டிநோங்கிலும் மில்பார்க்கிலும் தாயகமக்களுக்கான கவனயீர்ப்பு நிகழ்வு நடைபெற்றுள்ளது.

ஈழத்தில் தமிழர் மீதான தொடரும் அடக்குமுறைக்கு எதிராக நீதி கேட்டு மெழுகுவர்த்தி ஏந்திய கவனயீர்ப்பு ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த 28 - 03 - 2013 அன்று மாலை 7 மணி தொடக்கம் 8 மணிவரை மெல்பேணின் டாண்டிநோங்கிலும் மில்பார்க்கிலும் தாயகமக்களுக்கான கவனயீர்ப்பு நிகழ்வு நடைபெற்றுள்ளது.

டாண்டிநோங்கில் விக்ரோரிய மாநிலஅவை அங்கத்தவர் **John Pandazopoulos** யின் அலுவலக வாசலிலும் மில்பார்க்கில் சமஸ்டி நாடாளுமன்ற அங்கத்தவர் **Andrew Giles** யின் அலுவலக வாசலிலும் நடைபெற்றுள்ளது. இவ்விரு நிகழ்வுகளிலும் அவுஸ்தேரேலிய தமிழர்கள் பலர் கலந்துகொண்டு தாயகத்தில் அல்லலுறும் மக்களின் உணர்வுகளை

## சனல்-4 மீண்டும் ஒரு காணொளியை வெளியிட்டது

இறுதி நாளில் என்ன நடந்தது சனல்-4 மீண்டும் ஒருமுறை தனது காணொளியை வெளியிட்டது. குறிப்பாக இறுதி நாட்களில் பாதுகாப்பு வலையங்கள் மீதான எறிகணைத்தாக்குதல்கள் தொடர்பில் மகிந்த கூறும் கருத்துக்களும் இறுதி யுத்தம் காலத்தில் அங்கு கடமையாற்றிய வைத்தியரின் வாக்குமூலங்களும் இக்காணொளியில் காண்பிக்கப்படுகின்றது.

மகிந்தவின் விளக்கங்களும் வைத்திய அதிகாரி முன்னர் இராணுவ ஊடக மையத்தில் தெரிவித்த கருத்துக்களின் உண்மை தன்மைகள் தொடர்பிலும் விளக்கமாக விபரிக்கப்படுகின்றது. இலங்கை அரசால் நடாத்தப்பட்ட ஊடகவியலாளர் மாநாடு முன்னரே திட்டமிட்டு புலனாய்வுத்துறையாலும் இராணுவத்தினாலும் ஒவ்வொருநாளும் அம்மாநாட்டில் கேட்கப்படும் கேள்விகளும் அதற்கு தாம் தெரிவிக்கவேண்டிய பதில்களும் ஓர் நாடகம் போலவே தாம் தயார்படுத்தப்பட்டதாக சனல்-4 இடம் தெரிவித்தார்.




தான் மட்டுமல்ல அங்கு கடமையாற்றி எல்லா வைத்தியர்களுக்கும் உண்மை தெரியும் என்றும் இறுதி யுத்தத்தில் இராணுவத்தினரின் எறிகணைத்தாக்குதல் மற்றும் பொருளாதாரத்தடை காரணமாக பெருமளவான மக்கள் கொல்லப்பட்டும் காயமடைந்ததாகவும் அவர் தனது பேட்டியில் தெரிவித்தார்..

தான் இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைத்திருந்தபோது தன்னை அணுகிய இராணுவ புலனாய்வாளர் உங்கள்மீது மகிந்த ராஜபக்சே மற்றும் கோத்தபாய ராஜபக்சே மிகவும் கோபமடைந்துள்ளார்கள் ஏனெனில் நீங்கள் இறுதி யுத்தம் நடைபெற்றபோது உண்மையான தகவல்களை ஊடகங்களுக்கு வழங்கிவிட்டீர்கள், எனவே நீங்கள் அவர்களை சந்தோசப்படுத்தும் வகையில் செயற்பட்டால் உங்கள் விடுதலைக்கு உதவியாக இருக்கும் என்று தெரிவித்தே

**கேள்வி** வடகிழக்கில் உள்ளூராட்சி சபைகளில் ஆளும்கட்சியான தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் கட்சி உறுப்பினர்களின் தன்னிச்சையான முடிவுகள் தொடர்பாக த.தே.கூ இனால் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட உறுப்பினா்களுக்கு சாதகமாக நீதிமன்றம் தற்காலிக தடைவிதிக்கப்பட்டமை தொடா்பாக கூறமுடியுமா?

**பதில்** கிழக்கு மாகாணத்தில் தன்னிச்சையாக கூட்டமைப்பின் நிர்வாகத்தில் உள்ள பிரதேச சபைகளின் வரவு செலவு திட்டங்களில் எதிர்த்து வாக்களித்திருந்தனர். இதுபோன்ற செயற்பாடுகள் வடக்கிலும் சில பிரதேச சபைகளில் இடம்பெற்றிருந்தது. தற்போது இவ்வாறு கட்சியின் முடிவுக்கு எதிராக செயற்பட்ட ஏழு உறுப்பினர்களுக்கு தமது தரப்பு விளக்கம் அளிக்குமாறு கூட்டமைப்பினால் கேட்கப்பட்டுள்ளது. இத்தகைய கட்சியின் ஒழுக்காற்று நடவடிக்கையின் மூலம் கட்சியிலிருந்து விலக்கமுடியும்.

கட்சி ரீதியாக தனிஉறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்போது சிறிலங்காவின் ஆளும்கட்சியின் தயவுடன் நீதிமன்றம் ஊடாக சில தற்காலிக நடவடிக்கைகளை எடுக்ககூடிய வாய்ப்புகள் உண்டு. அதுபற்றி நீதிமன்றத்தில் எமது தரப்பு நியாயப்பாடுகளை சொல்லவேண்டிய நிலையேற்படும்.

**கேள்வி** காணாமல்போனோர் கணக்கெடுப்பு பற்றிய கருத்துக்கணிப்பை சிறிலங்கா அரசு நடத்தவுள்ளது. அதனை கூட்டமைப்பு புறக்கணித்துள்ளது. ஆனால் கூட்டமைப்பிடம் அத்தகைய புள்ளிவிபரங்கள் ஏதாவது உண்டா?

**பதில்** புள்ளிவிபரங்கள் கணக்கெடுப்புகள் தற்போது சிறிலங்காவில் நடைமுறையில் உள்ள சட்டங்களின்படி மத்திய அரசாங்கத்தாலேயே செய்யக்கூடிய நிலையுண்டு. தற்போது அவ்வாறு எடுக்கப்பட்ட புள்ளிவிபரத்தில் பிழையான முறையில் கேள்விகளை கேட்பதன் மூலம் தவறான புள்ளிவிபரம் ஒன்றை உருவாக்கும் நோக்கில் அதுசெய்யப்பட்டிருந்தது.

அதனால்தான் வடக்கு மாகாணசபையில் முழுமையான புள்ளிவிபரம் ஒன்றை பெற்றுக்கொள்ளும் நோக்கில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆனால் நடைமுறையில் உள்ள பிரச்சனைகளை கவனிக்கவேண்டும். நான் தனிப்பட்ட முறையில் ஐந்து இலட்சம் ரூபாக்களை செலவழித்து 12500 குடும்பங்களின் புள்ளிவிபரங்ளை சேகரித்தேன். ஆனால் அதனை திரட்டிய எனது செயலாளர் இனம்தெரியாதோரால் இரும்புகம்பிகள் கொண்டு தாக்கப்பட்டு அவரது கையெலும்புகள் உடைக்கப்பட்டிருக்கிறது. அத்தோடு புள்ளிவிபரப்பதிவுகளில் ஈடுபட்ட பெண்களை இராணுவத்தினர் அழைத்து எச்சரித்தார்கள். இதனால்தான் இத்தகைய புள்ளிவிபரத்தை கட்சியினாலோ தனிப்பட்டமுறையிலோ செய்யமுடியாத நிலையுள்ளது.

**கேள்வி** ஐந்துக்கு மேற்பட்ட அரபுநாடுகளுக்கு மகிந்த ராஜபக்ச சென்று ஜெனிவா மாநாடு தொடர்பாக ஆதரவு திரட்டிவருகின்ற நிலையில் கூட்டமைப்பின் அரசியல் செயற்பாடுகள் தொடர்பாக விளக்கமுடியுமா?

**பதில்** சுதந்திரமான சர்வதேச விசாரணை வேண்டும் என்ற கூட்டமைப்பின் கோரிக்கையை எதிர்வரும் தீர்மானத்தில் கொண்டுவரக்கூடிய முக்கிய இராசதந்திரிகளுடன், முக்கியமாக அமெரிக்க இராசதந்திரிகளுடன் பேச்சுவார்த்தைகளில் தெரிவித்திருக்கிறோம்.

இத்தீர்மானத்தினை முன்னெடுத்துசெல்வதற்கு 24 நாடுகளின் ஆதரவு தேவை. கடந்த முறை நானும் சென்றிருந்தேன். அதற்கான வேலைத்திட்டங்களில் பங்குகொள்வதற்கு இம்முறையும் கூட்டமைப்பின் முக்கிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடுகளுக்கு செல்வார்கள் என்றே நான் எதிர்பார்க்கிறேன்.

**கேள்வி** இம்மாநாடு தொடர்பாக இந்தியாவில் உள்ள ஏனைய கட்சிகளுடன் மற்றும் தமிழ்நாடு அரசியல் கட்சிகளுடன் எத்தகைய தொடர்பாடலை வைத்துள்ளீர்கள் ?

**பதில்** அனைத்துகட்சிகளுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருக்கிறோம். இப்போது இம்மாநாடு தொடர்பாகவும் அதற்காக சந்திப்புகளை ஏற்படுத்த முயற்சித்துவருகின்றோம். தமிழ்நாடு முதலமைச்சர் இன்னமும் தன்னை சந்திப்பதற்கான நேரத்தை ஒதுக்கிதரவில்லை. புதுடில்லி சென்றும் ஆளும்கட்சியுடனும் எதிர்கட்சிகளுடனும் பேச்சுகளில் ஈடுபடவுள்ளோம்.

**கேள்வி** போரில் அங்கவீனம் அடைந்தவர்களுக்கும் மிகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் புலம்பெயர்ந்தவர்களின் உதவிகள் என்பது ஒருவருக்கு பலரின் உதவியும் பலர் ஒரு உதவியும் இன்றி இருப்பதும் என்ற நிலை உள்ளது. இதற்கென ஒரு பொது கட்டமைப்பை ஏற்படுத்த முடியாதா ?

**பதில்** வவுனியாவில் உள்ள ஆயுர்வேத மருத்துவமனையில் உள்ள ஒரு பிரிவை அங்கவீனம் அடைந்தவர்களை தொடர்ச்சியாக பராமரிப்பதற்கான வசதிகளை செய்வதற்கு மாகாண சுகாதாரதுறை ஊடாக சனவரி மாதம் 17 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற வசதி கிளிநொச்சியிலும் முல்லைத்தீவிலும் யாழ்ப்பாணத்திலும் திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் மன்னாரிலும் ஏற்படுத்தப்படவேண்டும்.

பொதுமையம் ஒன்று ஊடாக இவ்வாறான உதவித்திட்டங்களை ஒருங்கிணைத்து வினைத்திறனுடன் செய்வதற்கான வழிகள் ஏற்படுத்தவேண்டும். இந்தக்குறை இன்னமும் இருந்துவருகின்றது. தற்போது மாகாணசபை ஊடாகவும் சில விடயங்களை செய்யலாம் என எண்ணுகின்றேன்.

**கேள்வி** கூட்டமைப்பினை பலமான சக்தியாக கொண்டுவருவதில் உள்ள சவால்கள் எவை எனக்கூறமுடியுமா?

**பதில்** தமிழ்த்தேசிய கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிவுசெய்வதே முதன்மையான விடயமாக இருக்கிறது. கூட்டமைப்புக்கான அரசியல் நடவடிக்கைகள் என்று அல்லாமல் தமிழரசுக்கட்சி என்ற கட்சி ரீதியான செயற்பாடுகளுக்கே முதன்மை கொடுக்கப்பட்டுவருகின்றது. இந்தவிடயத்தில் சம்பந்தர், மாவை சேனாதிராசா இருவருக்கும் இதேகருத்தே நிலவுகின்றது.

நாங்கள் அனைவரும் சம்பந்தரை கூட்டமைப்பின் தலைவராக ஏற்றுக்கொண்டிருக்கிறோம். என்னை அதன் பேச்சாளராக நியமித்தார்கள். ஆனால் பேருக்கு அந்தநிலை எனக்கு வழங்கப்பட்டதே தவிர அனைவரும் தமது கருத்துக்களை கூட்டமைப்பின் கருத்துக்களாக சொல்லிவருகின்றார்கள்.

தமிழர்களின் பல்வேறுபட்ட பிரச்சனைகளை அணுகுவதற்கு குறிப்பாக காணாமல் போனோர் பாதிக்கப்பட்டோர் மற்றும் வெளியுறவு செயற்பாடுகள் தொடர்பாக பல்வேறு குழுக்களை நிறுவி செயலாற்றமுடியும். அத்தோடு கட்சி ரீதியான கட்டமைப்பு இல்லாவிட்டால் ஒவ்வொருவரும் தமக்கு ஏற்றமுறையில் கருத்துக்களை கூறிக்கொண்டும் செயற்பட்டுக்கொண்டும் இருப்பார்கள். தமிழரசுக்கட்சி என்பது இளைஞர் அணிஎன்ற பெயரிலும்,மாவட்ட குழுக்கள் என்றவாறும் கிளைகளை திறக்கிறார்கள். அதுபோல ஏனைய கட்சிகளும் மாவட்டமட்டத்தில் கிளைகளை திறக்க ஆரம்பித்தால் நிலமை சிக்கலாகும் இதுவும் இன்னொரு காரணமாகும்.

தமிழரசுக்கட்சியை சேர்ந்தவர்கள் தமது சிந்தனையை மாற்றி - தமிழர்களுடைய அடிப்படையான பிரச்சனைகளை கையாளப்படவேண்டிய அவசியத்தை உணர்ந்து தமிழ்த்தேசிய கூட்டமைப்பாக வளர்க்கமுன்வரவேண்டும்.

**கேள்வி** கூட்டமைப்பானது வடக்கு கிழக்கு என பரந்துவிரிந்து செயலாற்றவேண்டிய நிலையில் கூட்டமைப்பின் முடிவுகள் எவ்வாறு எட்டப்படுகின்றது?

**நடைமுறையில் உள்ள பிரச்சனைகளை கவனிக்கவேண்டும். நான் தனிப்பட்ட முறையில் ஐந்து இலட்சம் ரூபாக்களை செலவழித்து 12500 குடும்பங்களின் புள்ளிவிபரங்ளை சேகரித்தேன். ஆனால் அதனை திரட்டிய எனது செயலாளர் இனம்தெரியாதோரால் இரும்புகம்பிகள் கொண்டு தாக்கப்பட்டு அவரது கையெலும்புகள் உடைக்கப்பட்டிருக்கிறது. அத்தோடு புள்ளிவிபரப்பதிவுகளில் ஈடுபட்ட பெண்களை இராணுவத்தினர் அழைத்து எச்சரித்தார்கள். இதனால்தான் இத்தகைய புள்ளிவிபரத்தை கட்சியினாலோ தனிப்பட்டமுறையிலோ செய்யமுடியாத நிலையுள்ளது.**

**பதில்** நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையில் கலந்துரையாடல் நடைபெற்று வருகின்றது. அதுதவிர கட்சி ரீதியாக கூடிப்பேசி கதைத்து ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் அவ்வாறான கலந்துரையாடல் நடைபெறுவதில்லை.

தேர்தலுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட 21 பேர் கொண்ட இணைப்பாளர் குழுவைக்கூட உரியமுறையில் செயற்படாமல் முடக்குகின்ற நிலையே தமிழரசுக்கட்சியால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுதொடர்பாக சம்பந்தனிடம் பலமுறை கேட்டபோதும் உரியபலன் கிடைக்கவில்லை.

இந்தக்குழுவையாவது நல்ல முன்னுதாரணமாக கொண்டு அதனை தொடர்ந்து முன்னெடுத்திருக்கமுடியும். ஆனால் அதற்கு விருப்பமில்லாமல் இருக்கிறார்கள்.

**கேள்வி** இரணைமடுக்குள விவகாரம் அதன் முக்கியத்துவத்தை திசைதிருப்பி அரசியல் மயப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்பாக தங்கள் கருத்து?

**பதில்** இது விடுதலைப்புலிகளின் காலத்தில் உருவாக்கப்பட்ட திட்டமாகும். அதுதவிர யாழ்ப்பாணத்தில் எவ்வாறு சுத்தமான நீரை பெற்றுக்கொள்ளமுடியும் என இதுவரை ஆய்வு செய்யப்படவில்லை.

ஆனால் இரணைமடுக்குளத்திலிருந்து நீரை யாழ்ப்பாணத்திற்கு கொண்டுசெல்வது என்பதில்தான் பிரச்சனை இருக்கிறது. இதனை அரசியல்மயப்படுத்தாமல் உண்மையிலேயே மக்களுக்கு பயன்கிடைக்க வழிசெய்யவேண்டும்.

வன்னியில் பூநகரியிலேயே தண்ணியில்லாத பல கிராமங்கள் இருக்கின்றன. அதேவேளை பெருந்தொகை உதவித்தொகை திரும்பிச்செல்லக்கூடாது என்ற கருத்தும் பலரிடம் இருக்கிறது.

அணையை வலுப்படுத்துவது வாய்க்காலை வளப்படுத்துவது தண்ணியை விநியோகிப்பது என்ற 3 கட்ட திட்டங்களில் முதலிரு கட்டங்களை நிறைவேற்றுவதில் எந்தவித பிரச்சனையில்லை.

இரணைமடுக்குளத்திற்கு வரும் தண்ணீரானது வவுனியாவிலிருந்து கனகராஜன்குளம் ஊடாக இரணைமடுவுக்கு வருகின்றது. தற்போது இரணைமடுவிலிருக்கும் தண்ணீரை யாழ்ப்பாணத்திற்கு கொண்டுசெல்லதிட்டம் முன்வைக்கப்படுகிறது.

இதனை பொருத்தமான நிபுணர்குழு கொண்டு ஆலோசித்தே முடிவுசெய்யவேண்டும். வடமாகாணசபை அதற்கான நிபுணர்குழுவை நியமித்துள்ளது. அத்தோடு இத்திட்டத்திற்கு உதவிசெய்யும் நிறுவனங்களுடனும் இச்சிக்கலை விளக்கி கதைத்திருக்கிறேன். அனைவரும் ஏற்ககூடி ஒரு முடிவை எடுக்கவேண்டும் என கருதுகின்றேன்.

# நேர்காணல்



**கேள்வி** அதிகாரமற்ற வடமாகாணசபை தொடர்பாக என்ன நினைக்கின்றீர்கள்?

**பதில்** தற்போது வடமாகாண சபையின் செயலாளர் என்பவர் முஸ்லிம் அமைச்சர் றிசாட் பதியுதீனின் ஆதரவுடன் சனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார். அவரும் ஆளுநருடன் இணைந்துகொண்டு தமக்குத்தான் அதிகாரம் இருப்பதாக சொல்லிக்கொள்கின்றார்கள்.

இதனால் முதலமைச்சர் விக்கினேஸ்வரனால் இருக்கின்ற அதிகாரங்களை கூட பயன்படுத்தமுடியாமல் இருப்பதும் ஒரு மோசமான செயலே. தற்போது சிங்கள அரசாங்கத்திற்கு எதிராக என்று இல்லாமல் அரசோடு சேர்ந்தியங்கும் அரச நிர்வாகிகளுடன் கூட மோதவேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

முதலமைச்சரின் ஒப்புதலுடன்தான் மாகாணசபையின் பிரதமசெயலாளர் நியமிக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் தற்போது தனக்குத்தான் அதிகமான அதிகாரங்கள் இருப்பதாக பிரதமசெயலாளர் சொல்லுகிறார். இவ்வாறு மக்களால் ஆணைபெறப்பட்ட வடமாகாணசபையின் அதிகாரங்கள் உதாசீனப்படுத்தப்படுகின்றன.

**கேள்வி** அவுஸ்திரேலிய அதிகாரிகளுடனான சந்திப்புகள் பற்றி?

**பதில்** இங்கு வருகின்ற அவுஸ்திரேலியாவின் தூதுவர்களையும் அமைச்சர்களையும் சந்தித்தித்திருக்கிறோம். இங்கு தமிழ்மக்களுக்கு இருக்கின்ற பாதுகாப்பற்ற நிலையை சுட்டிக்காட்டிஇருக்கின்றோம். இந்த நிலை தொடரும்வரை வேறுநாடுகளுக்கு செல்கின்ற நிலை தொடரும் என்பதை தெளிவாக சொல்லியிருக்கின்றோம்.

ஆனால் அகதிகள் கட்டுப்படுத்துகின்றோம் என்ற போர்வையில் சிறிலங்கா அரசுடன் இணைந்துஅரசுக்கு கப்பல்களை கொடுத்து அரசின் மனிதவுரிமை மீறல்களை கவனியாது விடும் போக்கை அவுஸ்திரேலியா எடுத்துள்ளதையே நாம் காணக்கூடியதாகவுள்ளது.

**கேள்வி** இறுதியாக புலம்பெயர்ந்த மக்களுக்கு என்ன சொல்ல விரும்புகின்றீா்கள்?

...7ம் பக்கம் பார்க்க

தென்னிலங்கையில் சிங்கள கடும்போக்காளர்களை திருப்திப் படுத்தும் நோக்கிலே அரசாங்கம் செயற்பட்டு வருவதாக வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் குற்றம்சாட்டியுள்ளார். பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் வீரகேசரி வாரவெளியீட்டின் பிரதம ஆசிரியர் ஆர். பிரபாகனின் ஆசிரியர் தலையங்கத்தின் தரிசனம் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புறத்தில் அங்கிருந்து ஒன்றரை கிலோமீட்டர் தொலைவில் இருப்பது உண்மை. ஆனால், மனித எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்ட இடம் இந்துக்கள் வாழ்ந்த இடம். இந்துக்கள் பிரேதங்களைப் புதைப்பது இல்லை. எனவே, பணிப்பாளர் நாயகத்தின் கூற்று கேள்விக்கிடமாகியுள்ளது. இது பற்றி இன்று ஆசிரியத் தலையங்கம் எழுதினால், வருங்காலத்தில் அது ஒரு வரலாற்று பூர்வமான கட்டுரையாகிவிடும்.

காரணங்கள் கூறப்படவில்லை. இராணுவம் பல காணிகளையும், பண்ணைகளையும் தம் வசம் ஒப்படைக்கும்படி கூறி, உறுதி முடித்துத் தருமாறு எங்கள் அலுவலர்களைக் கட்டாயப்படுத்துகின்றார்கள்.

கிழக்கில் நடைபெற்ற கட்டாயமான குடிசன விகித மாற்றம் தற்போது வடக்கில் மிக வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதற்கு இராணுவம் உற்ற துணையாக நிற்கின்றது. மூன்று தசாப்த காலமாக நீடித்த உள்நாட்டுப் போரின் போது தமிழ்ப்பேசும் மக்கள் மத்தியில் மிதவாத அரசியல் போக்கு குன்றிப் போயிருந்த சூழ்நிலையில், தமிழ்ப் பத்திரிகைகள் தமிழ் மக்களின் அவலங்களை வெளிக்கொண்டு வருவதில் அவர்கள் ஆற்றிய பணியும், பங்கும் மகத்தானது. அரசியல்

# சிங்கள அரசின் அண்மைக்கால போக்கை ஆதாரத்துடன் விளக்குகிறார் முதல்வர்

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், வட மாகாண சபையின் ஒத்துழைப்பை நல்க முன்வந்த எனக்கு நற்சமிஞ்ஞைகளை முதலில் காட்டி விட்டு, எம்மை அலட்சியம் செய்வதிலேயே அரசாங்கம் அக்கறை காட்டி நிற்கின்றது. எமக்கு ஒத்துழைப்பை நல்குவதால் சர்வதேச சமூகத்தின் நெருக்குதல்களைத் தணிக்க முடியும் என்பதில் நம்பிக்கை அற்றே அரசாங்கம் செயற்படுகிறது. மாகாணசபை முதல்வரின் கருத்து ஒருமித்தலுடன்தான் முதன்மைச் செயலாளர் நியமிக்கப்பட வேண்டும் என்ற மாகாண சபைகள் சட்டம் பிரிவு 32ன் ஏற்பாடுகளுக்கு எதிராக அதாவது, நடைமுறைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக, அரசாங்கம் தனக்குகந்த பிரதம செயலாளரை பதவியில் நீடிக்கச் செய்து, போர்க்காலத்தின் போதான முந்தைய படைத் தளபதியைத் தொடர்ந்து ஆளுநராக வைத்திருந்து, அவரைக் கொண்டு மாகாண சபைகளுக்கு என்ன உரித்து இருக்கின்றது.

எல்லாம் ஆளுநர் வசமே என்ற கருத்தை நிலவச் செய்து, இந்த வட மாகாண சபையால் எதுவுமே செய்ய முடியாது, அவர்கள் கையாலாகாதவர்கள் என்ற கருத்தைக் கருவாக எம் மக்கள் மனதில் விதைக்க அரசாங்கம் கடுமையாகப் பாடுபட்டு வருகின்றது. இன்று வன்னியில் நடப்பதை எடுத்துக் கொள்வோம். மாந்தையில் மனித எலும்புக்கூடுகள் காணப்பட்ட இடம் ஒரு மயான பூமி என்றுள்ளார் தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்கள பணிப்பாளர் நாயகம். இதன் சரி பிழையை பத்திரிகைகள் எடுத்துக் காட்டாது விட்டுவிட்டால் உண்மை விலைபோய்விடும்.

நாம்ஆராய்ந்துபார்த்ததில்அறுபதுவருடங்களுக்குமுன்னர் பூர்வாங்க வரைபடமிலக்கம் S-677ஆனது 2.12.1955ல் அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது. அதில் துண்டுகள்




மக்கள் இன்றே உஷாராகிவிடுவார்கள். வெளிநாடுகள் விழித்துக்கொள்ளும். அதைத்தான் சொல்ல வருகின்றேன். அடுத்து, வவுனியாவில் இருக்கும் கொக்கச்சாங்குளம் வவுனியா வடக்கைச் சேர்ந்தது. அதன் ஒரு பகுதி முல்லைத்தீவுக்கும் உரியது. அதாவது, தமிழர்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த இடமிது. அண்மையில் இதனை வவுனியா தெற்கின் கீழ் அரசாங்கம் கொண்டு வந்துள்ளது. அதாவது, சிங்களவர் வாழும் பகுதியின் நிர்வாக அலகின் கீழ் மாற்றியுள்ளது. கொக்கச்சான் குளம் இப்பொழுது கலாபோகஸ்வெவ (**Kelabogaswewa**) என்று பெயர் மாற்றப்பட்டு 5000 சிங்களக் குடும்பங்களை அங்கு குடியிருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

தலைமைத்துவங்களினால் செய்ய முடியாமல் போன சில காரியங்களைக்கூடத் தமிழ் ஊடகவியலாளர்கள் தங்களுக்கு நேரக்கூடிய ஆபத்துக்களையும் பொருட்படுத்தாமல் செய்திருக்கின்றார்கள்.

பலர் பத்திரிகைத் தொழிலைக் கடைப்பிடிக்கப்போய் உயிர்த்தியாகங்களையும் செய்திருக்கின்றார்கள் என்பதை நாங்கள் மறக்கக் கூடாது. வேறு பலர் நாட்டை விட்டகன்று அஞ்ஞாதவாசம் வாழ்கின்றார்கள் என்பதும் உண்மை. இலங்கையில் தமிழ் முஸ்லிம் மக்களின் அரசியலும், சமூக வாழ்வும் பெரும் இடர்பாடுகளுக்குள் அகப்பட்டுத் தவித்துக் கொண்டிருக்கும் இன்றைய சூழலில், தமிழ் ஊடகங்கள் குறிப்பாக தனியாருக்குச் சொந்தமாக இருக்கின்ற தேசிய தமிழ்ப் பத்திரிகைகள் இதுநாள் வரையில் செய்திருக்கக் கூடிய பணிகளுக்கு மேலதிகமாகப் பயனுறுதி உடைய கூடுதல் பணிகளை ஆற்ற வேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருக்கின்றன.

**மனித எலும்புக்கூடுகள் காணப்பட்ட இடம் ஒரு மயான பூமி என்றுள்ளார் தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்கள பணிப்பாளர் நாயகம் மனித எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்ட இடம் இந்துக்கள் வாழ்ந்த இடம். இந்துக்கள் பிரேதங்களைப் புதைப்பது இல்லை. எனவே, பணிப்பாளர் நாயகத்தின் கூற்று கேள்விக்கிடமாகியுள்ளது.**

**கொக்கச்சான் குளம் இப்பொழுது கலாபோகஸ்வெவ (Kelabogaswewa) என்று பெயர் மாற்றப்பட்டு 5000 சிங்களக் குடும்பங்களை அங்கு குடியிருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.**

31ம், 32ம் இணையும் இடத்தில்தான் மேற்படி மயான பூமி என்று கூறப்படும் இடம் இருந்திருக்க வேண்டும். ஆனால், இவ்விடத்திற்கு ஒரு பக்கம் தெரு. மறுபக்கம் குளம். இந்தத் துண்டு 31 ஆனது திருக்கேதீஸ்வரத்துக்குக் கொடுப்பதற்காக நிர்ணயிக்கப்பட்டிருக்கும் துண்டு. துண்டு 32க்கு முன்புறத்தில் தெருவின் அடுத்த பக்கத்தில் மேற்படி வரைபடத்தின் படி ஒரு சுற்றுலா பங்களா இருந்திருக்கின்றது.

இது போரின்போது அழிந்துவிட்டது. அத்துடன், துண்டு 32ல் ஒரு பலசரக்குக் கூட்டுறவுக் கடையொன்றும் இருந்திருக்கின்றது. இது இவ்வாறிருக்க துண்டு 32ல் மயான பூமி அமைந்திருந்தது என்பது கட்டுக்கதைபோல் தென்படுகின்றது. கத்தோலிக்க மயான பூமி ஒன்று மேற்குப்

இதற்கு இராணுவம் முழு ஒத்தாசையையும் வழங்கி நிற்கின்றது. கொண்டு வரப்படும் 5000 குடும்பங்களும் வடமாகாணத்திற்கு அப்பால் வசிக்கும் குடும்பங்கள். இதுவரை வட மாகாணத்துடன் தொடர்பு கொண்டிராத குடும்பங்கள். மேலும் வவுனியா பாவற்குளத்தில் சுமார் ஒன்பது சதுர கிலோமீட்டர் இடத்தில் 600 சிங்களக் குடும்பங்களைக் குடியேற்றி வருகின்றார்கள். மேலும் 2009ல் உள் நாட்டில் குடிபெயர்ந்தவர்களை இருத்த உபயோகப்பட்ட மெனிக்பாம் முகாமானது, தற்போது சிறீலங்கா இராணுவத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலங்களில் தமிழ்ப் பேசும் மக்கள் இலங்கையின் எந்தப் பாகத்தில் இருந்தாலும் அவர்கள் இலங்கைத் தமிழ்ப்பேசும் மக்களே என்ற ஒரு நவீன சிந்தனைக்கு எடுத்துக்காட்டாகப் பரிணாமம் பெற்று வருகின்றார்கள். சௌமியமூர்த்தி தொண்டமானைத் தொடர்ந்து இளம் அரசியல்வாதி மனோகணேசனின் அரசியல் பண்பாடும் அதற்கு இடமளித்துள்ளது என்றால் ஒருவரும் அதனை மறுக்க முடியாது. முந்தைய காலத்தைப் போல் அன்றி, இன்று நவீன தொழில்நுட்பத்தின் வளர்ச்சி காரணமாக ஊடகத்துறை பிரமாண்டமான முன்னேற்றத்தைக் கண்டுள்ளது என்றார்.

## புதிய பணிமனையில் சிட்னி ஈழத்தமிழர் கழகம்.

ஈழத் தமிழர் கழகத்தின் முயற்சியினால் தமிழ் சமூகம் பயன் பெறும் வகையில் **Holroyd City Council** வீடு ஒன்றை **West Parramatta** இல் கொடுத்துள்ளது. ஈழத் தமிழர் கழகத்தின் காரியாலயமாகவும் இன்னும் பல தமிழ் சமூக அமைப்பினரின் ஒன்று கூடல் நிகழ்வுகளுக்கும் இந்த வீடு பயன்பட உள்ளது.





## பலூன்*-சிறுகதை

"மாமா பெரிசாக ஊதாதையுங்கோ.....
அப்பா..... ,
மாமாவை ஊதவேண்டாம் என்று சொல்லுங்கோ......"
என்று கண்கள் அகல விரிய,
முகத்தில் பயம் பரவ,
சத்தமாக கத்தி அழுதுகொண்டு,
காதுகள் இரண்டையும் தனது பிஞ்சுக் கைகளால் பொத்திக்கொண்டு ஓடிப்போய்
இரு கண்களையும் இறுக மூடிக்கொண்டு,
கதிரைகளுக்குப் பின்னால் மறைந்து கொண்டான் எட்மன்.
எட்மனுக்கு 9 வயது தான் ஆகிறது. அந்தக் குடும்பத்தில் மூத்த பையன்.

5 வருடங்களின் முன்னர் அவன் மிகச் சுட்டிப்பையன்.

அவனது கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாது தத்தளிக்கும் அவனது பெற்றோரும், அம்மம்மாவும்,4 வயதிலேயே அவனது சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளும் ஆர்வமும், விவேகமும், திறமையும் அவர்களை ஆச்சரியத்துக்கும் மகிழ்ச்சிக்கும் உள்ளாக்கியது.

அவர்கள் கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றுபவர்கள். கிறிஸ்மஸ் என்றாலே அவர்களுக்குக் கொண்டாட்டம் தான். அவர்களது வீட்டை பலூன்கள்,அலங்கார வளைவுகள் என்பவற்றுடன் கிறிஸ்மஸ் மரத்தினை வர்ண வர்ண மின்குமிழ்கள் கொண்டு அலங்கரித்து தமது அனைத்து வசதிகளையும் முயற்சியையும் வெளிப்படுத்தி தமது ஆனந்தத்தை பகிர்ந்து கொள்வார்கள்.



பலூன்கள் ஊதி கட்டி அலங்கரிப்பதற்குள், ஒவ்வொரு பலூனாக, அவற்றின் மேல் விழுந்து உடைத்து விட்டு, கொக்கட்டம் போட்டுச் சிரிப்பான் எட்மன். சில வேளைகளில், எட்மனின் சுட்டித்தன வேலைகளை நிறுத்த , அவனுக்கு ஒரு அடி போட்டு பலூன் உடைப்பதை நிறுத்த முயற்சி செய்வாள் அம்மா மேரி.

அம்மம்மா மரியமோ,

"ஏன்டி பிள்ளைக்கு அடிக்கிறாய்.....? "

என்று மகள் மேரிக்குத் திட்டிவிட்டு எட்மனைக் கூட்டிக்கொண்டு கடைக்குச் சென்று ஒரு பக்கற் பலூன் வாங்கி வந்து அவன் உடைப்பதற்கென்றே அப்பக்கற்றில் இருக்கும் 50 பலூன்களையும் ஒவ்வொன்றாக ஊதிக்கொடுத்து உடைக்கச் செய்வாள்.

அப்பலூன்களை உடைப்பதற்காக ஒவ்வொரு பலூன்களின் மேலும் விழுந்து அவன் உடைக்க எடுக்கும் முயற்சியையும் உடைந்தபின்னர் அவன் ஏதோ ஒரு சாதனை செய்து விட்டது போன்று பெரிதாகச் சிரித்து ஆனந்தமடையும் அப்பிஞ்சினைப் பார்த்து புளகாங்கிதமடைவாள் மரியம்.

எட்மன் அம்மம்மாவின் செல்லக்குட்டி. எனென்றால் அவன் தான் அவளுடன் சேர்ந்து இருக்கும் முதலாவது பேரப்பிள்ளை. மரியத்தின் மற்றப் பிள்ளைகளின் ஊடாக பேரப்பிள்ளைகள் இருந்த போதும் அவர்களுடன் சேர்ந்திருக்கும் சந்தர்ப்பம் அவளுக்குக் கிடைக்கவில்லை. அவர்கள் அனைவரும் கனடாவிலேயே வசித்து வருகின்றனர்.

அதனை விட எட்மன் அச்சு அசலாக மரியத்தின் மூத்த பிள்ளை போன்று இருப்பான். எல்லாமாகச் சேர்ந்து மரியத்துக்கு எட்மன் மீது அளவு கடந்த பாசத்தை அள்ளிக் கொட்டியிருந்தது.

இப்படி பலூன் என்றாலே ஊதி உடைத்து அந்தச் சத்தத்தில் சந்தோசமடையும்

எட்மன், ஏன் இப்போ பயந்து ஒடுகின்றான் என்றால் அவனது 5வது வயதில் நடந்த பயங்கரமான சம்பவம் ஒன்று தான் காரணமாக இருந்தது. இப்போதும் மாறாத வடுவாகவும் இனிமேலும் அப்படி ஒரு சத்தத்தைக் கேட்டு விடக் கூடாது என்றும், நினைத்தாலே பயங்கரமானதாக நிரந்தரமாக அந்தப் பிஞ்சு நெஞ்சில் ஒட்டிக்கொண்டு விட்டது.

எந்தச் சத்தத்தைக் கேட்டு சிரித்து அளவில்லா ஆனந்தமடைவானோ அதே போன்ற ஒரு வெடிச்சத்தம் அவனுக்கு ஒரு முடிவில்லாத் துன்பத்தைக் கொடுத்து அந்தச் சத்தத்தின் மீது வெறுப்பையும் பயத்தையும் ஏற்படுத்தியிருந்தது. அப்படியொரு சத்தத்தை மீண்டும் கேட்டு விடக் கூடாது என்று எண்ணியது. உள்ளம் உயிர் அனைத்தையும் நடுங்க வைக்கும் பயத்தையும் கொடுத்திருந்தது.

2009ம் ஆண்டு இலங்கையில், இலங்கை அரசின் தந்திரக் கதைகளைக் கேட்டு தமது உடமைகள் நிலங்கள் வீடுகளை விட்டு உடுத்த துணிகளுடன் காவிச்செல்லக் கூடிய உணவுப் பொருட்களையும் எடுத்துக் கொண்டு இலங்கை அரசினால் அறிவிக்கப்பட்ட "பாதுகாப்பு வலயங்கள் " ஒவ்வான்றாகச் சென்று இறுதியாக முள்ளிவாய்கால் கடற்கரையில் அனைவரும் அனல் பறக்கும் வெயிலில் துணிகளாலும் தறப்பாள்களாலும் கூடாரம் அமைத்து தமது உயிர்களைக் கையில் பிடித்துக்கொண்டு கடவுளிடம் பாரத்தைப் போட்டு விட்டு அடுத்த அறிவிப்புக்காக காத்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு பக்கம் சமுத்திரக்கடல் யாரும் எங்கும் செல்ல முடியாதவாறு தடுத்துக் கொண்டிருந்தது. மறுபக்கம் சுற்றிவர இலங்கையரசின் கொடும் இராணுவப்படைகள், உயிர்க்கொல்லி ஆயுதங்களால், சூட்டையும் ஏவுகணைத் தாக்குதல்களையும் புலிகள் மீது தாக்குவதாகக் கூறிக்கொண்டு தனது சொந்த மக்கள் மீதே ஏவிக் கொன்று கொண்டு முன்னேறியது.

உலக நாடுகளால் உற்பத்தி செய்யப்பட்ட ஆயுதங்களினதும் குண்டுகளினதும், பரிசீலனைக் களமாக இருந்த முள்ளிவாய்க்காலிலேயே அந்தப் பிஞ்சின் மனதில் ஆறாத வடுவாக ஒரு சம்பவம் நடந்தேறியது.

அன்று வெள்ளிக்கிழமை என்பதால் காலையிலேயே, கடலில் சென்று குளித்து விட்டு வந்து பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தாள் மரியம். என்ன கஸ்ரம் வந்தாலும் வெள்ளிக்கிழமை என்றால், கடவுளைப் பிரார்த்தனை செய்வதை நிறுத்தமாட்டார்கள் தமிழர்கள்.

தமது கஸ்ரங்களையும் துன்பங்களையும் கடவுளிடமே கண்ணீர் விட்டு முறையிட்டு, தமது கவலைகளைப் போக்கி நிம்மதியடைவார்கள். அவ்வகையில் மரியம் பிரார்த்தனையை ஆரம்பிக்க, எட்மனை மரியத்துடன் விட்டு விட்டு மேரியும் கணவரும் கடலுக்குக் குளிக்கச் சென்றார்கள். மரியம் பிரார்த்தனையில் இருக்கும் போது எட்மன் கூடாரத்தின் வெளியில் வந்து விளையாடிக் கொண்டிருந்தான்.

ஏவுகணைகள் ஆங்காங்கு வீழ்ந்து வெடித்துக் கொண்டிருந்தது. மக்கள் காயப்பட்டுச் செத்துக் கொண்டிருந்தார்கள். தினம் தினம் ஆயிரக்கணக்கில்.... கொத்துக் கொத்தாக....!

ஆரம்பத்தில் தமது சாவுக்கு அஞ்சியவர்கள் இப்போது எதனையும் கருத்தில் எடுப்பதில்லை. திறந்த வெளியில் இலங்கை அரசினால் அறிவிக்கப்பட்ட "பாதுகாப்பு வலயம்" எனுமிடத்தில் இலங்கையரசின் கொடும் இராணுவத்தினால், அங்கிருந்து எங்கும் தப்பி ஓடிவிட முடியாதபடி சுற்றிவளைக்கப்பட்டு வஞ்சகமாகக் கொல்லப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

கண்மூடித்தனமாக மக்களையே குறிவைத்துத் தாக்கப்படும் ஏவுகணைகளுக்கு, அந்த வெள்ளை வெளேரென்ற கடற்கரை மண்ணிலும் கடும் நீலக்கலரில் இருக்கும் சமுத்திரக் கடலிலும் எங்கே சென்று ஒழித்துக் கொள்வது? மூன்று லட்சம் பேரும் எங்கே சென்று மறைந்து கொள்வது..? அதனால், அங்கிருந்த மக்களுக்கு "போற உயிர் எப்போதோ ஒரு நாளைக்குப் போகத்தானே போகிறது.... இனியும் எங்கோ போய் ஒழித்துக் கொள்வது...."என்று விரக்தியின் விளிம்புக்குத் தள்ளப்பட்டார்கள். ஏவுகணைகள் ஏவப்படும் சத்தங்கள் கேட்ட போதும் அதனைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் தமது அன்றாட வேலைகளில் ஈடுபட்டனர். ஆனாலும் காயப்பட்டு அழுந்திச் சாவதை விட ஒரேயடியாகச் செத்து மடிந்து விட வேண்டும் என்பதே கடவுளிடம் அவர்களது பிரதான மன்றாட்டமாக இருந்தது.

அப்படி வந்த ஏவுகணையில் ஒன்று தான் மரியம் பிரார்த்தித்துக் கொண்டிருந்த கூடாரத்தின் மீதும் வீழ்ந்து வெடித்து ஒரே நொடியில் அவளை இரத்தமும் சதையுமாக்கி அவளது உயிரைக் காவு கொண்டு அப்பிஞ்சின் மனதை சுக்கு நூறாக்கியிருந்தது.

கூடாரத்தின் வெளியில் விளையாடிக் கொண்டிருந்ததால் எட்மன் அதிஸ்டவசமாகத் தப்பி விட்டான்.

மேரியும் கணவரும் வந்து கத்திக் குளறி ஒப்பாரி வைத்தனர். அப்போது எட்மனும் அழுதான். அவனது கண்களில் கண்ணீர் ஓடிக்கொண்டே இருந்தது. அழுகிறான் அழுகிறான் சத்தமே வரவில்லை..அழுது அழுது குரல் எல்லாம் அடைத்து விட்டது... ஏனென்றால் இரத்தமும் சதையுமாக மீண்டும் வரமுடியாதபடி கிடப்பது அவனது அன்புக்குரிய அம்மம்மா என்பதே.

அம்மா தனக்கு அடிக்க வந்தால் அம்மம்மா எட்மனுக்கு அடைக்கலம் கொடுப்பதோடு அல்லாமல் தனது தாயாரை தடுத்து கட்டுப்படுத்தும் அதிகாரம் அம்மம்மா ஒருவருக்கே இருந்ததாக அவன் நம்பியிருந்தான்.

தனது சிறிய சிறிய ஆசைகளையெல்லாம் நிறைவேற்றி வைத்த அம்மம்மா இப்போ உயிருடன் இல்லை. எந்த மாதிரியான வெடிச்சத்தத்தை விரும்பி விளையாடி மகிழ்ந்தானோ அந்த விதமான ஒரு வெடிச்சத்தமே தனது அளவில்லா அன்புக்குரியவரின் உயிரைப் பறித்தது.... தன்னிடம் இருந்து நிரந்தரமாகப் பிரித்தது... என்று அந்தப் பிஞ்சின் நெஞ்சில் ஆழமாகப் பதிந்து விட்டது. இனிமேலும் அந்தச் சத்தத்தைக் கேட்டு விடக் கூடாது என்று அந்த ஒன்பது வயதுப் பிஞ்சின் மனம் உறுத்திக் கொண்டிருந்தது.

அன்று கிறிஸ்மஸ் தினத்துக்காக வீட்டை அலங்கரிப்பதற்காக வந்த நண்பர்ஒருவர் பலூன் ஊதும் போதே தனது காதுகளைப் பொத்திக் கொண்டு ஓடிப்போய் கதிரையின் பின் ஒளிந்து கொள்ளவும், கோழி தனது இறகுகளுக்குள் தனது அனைத்துக் குஞ்சுகளுக்கும் அடைக்கலம் கொடுத்துக் காப்பது போல் மேரி தன்மகனைக் கட்டி அணைத்து விம்மத் தொடங்கினாள்.

ஏனென்றால் மரியத்தின் இழப்பு எட்மனுக்கு மட்டுமல்லாமல் மேரிக்கும் அந்தச் சம்பவத்தை கண்முன் கொண்டு வந்து நிறுத்தியது.

மீண்டும் அந்த நினைவழியா தடங்களுடன், தனக்கிருந்த கவலைகளை மறைத்து, வீட்டை அலங்கரிப்பதனை நிறுத்தி விட்டு எட்மனுக்கு ஆறுதல் சொல்லிக்கொண்டு மேரியையும் சமாதானம் செய்ய முற்பட்டார் கணவர் ஜோசப்.

-அழகன் -

## அன்பு வாசகர்களே!

ஈழமுரசுக்கான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

ஈழமுரசில் உங்கள் படைப்புக்கள் வெளிவரவேண்டுமா? பொருத்தமான படைப்புக்களை எமக்கு அனுப்புங்கள்.

வேறெங்கும் வெளிவராத படைப்புக்களாயும் ஈழமுரசில் வெளியிடுவதற்குப் பொருத்தமாகவும் இருந்தால் போதுமானது. துறைசார்ந்த கட்டுரைகள், இலக்கியப் படைப்புக்கள், விமர்சனங்கள், கவிதைகள், சிறுவர் படைப்புக்கள் என்பன எதிர்பார்க்கப்படுகின்றன. எழுதிய படைப்புக்களை நஅரசயளரஐபஅயடை.உழஅ என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.

நன்றி.



# தடையங்கள் அழிக்கப்படுகின்றதே தவிர அதன் வடுக்களல்ல! முன்னாள் போராளிகளின் உணர்வுகள்

– அல்யசீரா



வடக்கை தமது ஆளுகைக்குள் வைத்திருக்கும் இவர்களது அணுகுமுறையானது வருந்தக்கவிதத்தில் அமைவதுடன் அது இனநல்லிணக்கமாக இருக்கவில்லை. உண்மையில் இதுவொரு ஆக்கிரமிப்பாகும் என்கிறார் இலங்கையில் நீதியும் சமாதானத்திற்குமான இயக்கத்தின் இயக்குனர் பிரட் காவர்.

இலங்கையின் போர் நடந்து முடிந்த பின்னர் அழிக்கப்பட்ட வீதிகள் பல மீளமைக்கப்பட்டுள்ளது, புகையிரதப்பாதைகள் மீளமைக்கப்படுகின்றன, வீதியோரங்களிலுள்ள கண்ணிவெடிகள் அகற்றப்படுகின்றது, எங்கு பார்த்தாலும் சனாதிபதி மகிந்த ராஜபக்சேயின் கட்டவுட்டுக்கள் மற்றும் போஸ்ரர்களையும் சேதமடைந்த கட்டடங்களில் தொங்குகின்ற பனர்களையும் காணக்கூடியதாக உள்ளது.



இராணுவத்தினால் அமைக்கப்பட்ட வெற்றி சின்னங்களும் மற்றும் அரசின் நல்லிணக்கம், முன்னேற்றம் தொடர்பான கருத்துக்களை பறைசாற்றும் அறிவிப்புக்களையும் காணக்கூடியதாக இருக்கின்றபோதும் பலரும் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

வடக்கை தமது ஆளுகைக்குள் வைத்திருக்கும் இவர்களது அணுகுமுறையானது வருந்தக்கவிதத்தில் அமைவதுடன் அது இனநல்லிணக்கமாக இருக்கவில்லை. உண்மையில் இதுவொரு ஆக்கிரமிப்பாகும் என்கிறார் இலங்கையில் நீதியும் சமாதானத்திற்குமான இயக்கத்தின் இயக்குனர் பிரட் காவர்.

போர்முடிந்து ஐந்து ஆண்டுகளின் பின்னரும் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு பகுதிகள் எங்கும் பதுங்கு குழிகள், காவல் வேலிகள் புதிதாக அமைக்கப்படும் புத்த விகாரைகள் என பெரியளவிலும் சிறியளவிலும் இராணுவ பிரசன்னமே காணப்படுகின்றது.

இராணுவத்தினர் அனைவரும் சிங்களவர்கள் என்பதுடன் அவர்கள் தமிழ் பேசமாட்டார்கள். இவர்களை ஆக்கிரமிப்பு படைகளாகவே அங்குவாழும் மக்கள் கருதுகின்றார்கள்.இராணுவ தந்திரோபாயம் வன்முறையாகவே இருந்தது அதனால் ஏற்பட்ட இழப்பு மிகவும் அதிகம். ஐ.நா வின் அறிக்கையின் பிரகாரம் நாற்பதாயிரத்திற்கு மேற்பட்ட பொதுமக்கள் இறுதிப்போரில் கொல்லப்பட்டனர்.

இறுதிப்போரில் இலங்கை அரசாங்கத்தால் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள் மற்றும் மனிதஉரிமை செயற்பாடுகள் தொடர்பான சர்வதேச விசாரணையை நடாத்த ஐ.நா மனித உரிமை ஆணையம் சிபார்சு செய்திருந்தது. பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழ்ந்த பொது மக்கள் மீதான செல்தாக்குதல்கள் மற்றும் சரணடைந்த புலி உறுப்பிர்கள் நிலமை என்பன இலங்கை அரசின் மீதான குற்றச்சாட்டுக்களாயிருக்கின்றது.

போருக்கு முன்னரும் பின்னருமான மனித உரிமை மீறல்கள், காணாமல்போதல்தொடர்பான குற்றச்சாட்டுக்கள் அதிகரித்துள்ளமையும், மகிந்த குடும்பத்தின் மீதான ஊழல் குற்றச்சாட்டுக்களும் இலங்கைமீதான சர்வதேச விசாரணைக்கான அழுத்தத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளது. போர் முடிந்து அதற்கான கால அவகாசம் சிறிலங்கா அரசிற்கு அளிக்கப்பட்டும் இன்னும் அதற்கான தீர்வுகள் எவையும் எட்டப்படவில்லை எனினும் இலங்கை அரசு இக்குற்றச்சாட்டுக்களை தொடர்ச்சியாக மறுத்து வருகின்றது.

இது இனமுரண்பாடு, இனப்பிரச்சனை அல்லது இனங்களுக்கிடையிலான அதிகாரப்பகிர்வு தொடர்பான பிரச்சனைகளை அடிப்படையாக கொண்டது. எனினும் இலங்கை அரசு இதனை வெறும் பயங்கரவாதத்திற்கு எதிராக வெற்றிகொள்ளப்பட்ட ஒன்றாகவே பார்க்கின்றபோதும் இப்பிரச்சனைக்கான அடிப்படை காரணத்தை பார்க்கத்தவறுகின்றது.

“விடுதலைப்போர் என்பது அவசியமான ஒன்றாகவே நான் உணர்கின்றேன் நான் செய்த அனைத்து தியாகங்களும் அர்த்தமுள்ளதாகவே எனக்கு தெரிகின்றது“

திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளராவிருந்த எழிலன் அவர்களின் மனைவி கூறுகையில் எனக்காகவும் எனது பிள்ளைகளின் பாதுகாப்பிற்காகவும் எனது கணவரை இராணுவத்திடம் சரணடையக்கூறியதால் அவர் தனது தற்கொலை முயற்சியை கைவிட்டு இராணுவத்திடம் சரணடைந்தார் என்றார். இவரது கணவர் ஏனைய போராளிகளுடன் 2009 மே 18 திகதி இராணுவத்தினரிடம் சரணடைந்தபின் அவர் தொடர்பான எந்த தகவல்களும் கிடைக்கப்பெறவில்லை என்றும் அவருடைய விடுதலைக்கு அல்லது அவரை கொலை செய்தவர்களுக்கு தண்டனை பெற்றுத்தருவதற்கும் தான் பாடுபடுவேன் என்றும் அவர் கூறினார்.

போருக்கு முன்னரும் பின்னரும் காணாமல்போனவர்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும்படி குரல் எழுப்பி வருகின்றார். தனது மக்களுக்களின் ஆதரவினைபெற்று மாகாணசபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டிருககிறார். இதனால் இவர் அரசுக்கும் அரசு சார்பானவர்களுக்கும் ஓர் எதிரியாகவே தோற்றமளிக்கின்றார். தேர்தல் பிரச்சார காலத்தில் அரச ஆதரவாளர்களால் இவரது வீடு தாக்குதலுக்கு உட்பட்டதோடு பாதுகாப்பு அமைச்சு இவருக்கு எதிரான பத்திரிகைகளையும் விநியோகித்திருந்தது. பாதுகாப்பு அமைச்சு அவரை புனர்வாழ்வளிக்க திட்டமிட்டதாக தை மாத ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

முன்னைநாள் நாள் போராளியான 40 வயதான ஜோச் என்பவர் கருத்துரைக்கையில் தான் ஓர் போராளியாக இறுதிவரை அங்கு இருந்ததாகவும் அதனை நினைத்து தான் பெருமையடைவதாகவும் கூறுகின்றார். ஆனால் இறுதி சந்தர்ப்பத்தில் புலிகள் ஆயுதங்களை மௌனித்திருந்தவேளை தான் குடும்பத்தோடு இராணுவக்கட்டுப்பாட்டிற்கு சென்ற வேளை உடனடியாக இராணுவத்தால் கைது செய்யப்பட்டு இரண்டு வருடங்களாக கடும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு தான் பலமுகாங்களுக்கு மாற்றப்பட்டு பின்னர் வெளிநாட்டிலுள்ள உறவுகளின் நிதி உதவியோடு நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து விடுதலையானேன் எனவும் தெரிவித்தார்.

இருப்பினும் இன்றுவரை ஒரு தொழிலினை பெறமுடியாமல் இருப்பதோடு வேலைகள் இருந்தாலும் இராணுவத்தின் அச்சுறுத்தல் காரணமாக எமக்கு வேலை தர தொழில்தருனர்கள் அஞ்சுகின்றார்கள் என்றும் கூறினார். இந்த நிலை மாறவேண்டும் இந்த அரசாங்கம் எந்த ஒரு தீர்வையும் வழங்கப்போவதில்லை எங்களுடைய மக்களின் தலைவிதி இதுதான் எனக்கூறினார்.

போருக்கு பின்னர் அவர்கள் மக்கள் மனங்களை வெல்லவில்லை என்றும் மீள்குடியமர்வு சம்பந்தமாக அவர்கள் எந்த உதவிகளையும் செய்யவில்லை என்றும் கூறினார். ஒவ்வொரு கிராமங்களிலும் புத்தர் சிலைகளை வைப்பதிலும் இவற்றை இராணுவமயமாக்குவதிலுமே கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர். “வரலாற்றில் எந்த ஒரு இனமும் அடக்குமுறையில் தள்ளப்படுகின்ற போது ஓர் நிலையில் அவர்கள் அதற்கு எதிராக தீவிரமாக செயற்பட விளைகின்றனர்“ என்கிறார் அவர்.

30 வயதான செல்வி என்பவர் இளவயதிலேயே புலி உறுப்பினராக சேர்ந்து மருத்துவப்பிரிவில் சேவையாற்றியவர், காயப்பட்ட போராளிகளுக்கு சிகிச்சை அளிக்க சென்றவேளை சினைப்பர் தாக்குதலுக்கு உட்பட்டார். கடைசிப்போரில் இவரது சகோதரி கட்டாய ஆட்சேர்ப்பிற்கு உள்ளாகி பின்னர் போரில் இறந்தார். இவரின் கணவர் அரசியல்பிரிவில் பணியாற்றி இறுதிப்போரில் கொல்லப்பட்டார்.




“விடுதலைப்போர் என்பது அவசியமான ஒன்றாகவே நான் உணர்கின்றேன் நான் செய்த அனைத்து தியாகங்களும் அர்த்தமுள்ளதாகவே எனக்கு தெரிகின்றது“ என்றும் கூறுகின்றார். இறுதியில் இராணுவக்கட்டுப்பாட்டு பகுதிக்குள் வந்தபோது இராணுவத்தினர் என்னை புலி உறுப்பினர் என அடையாளம் காணவில்லை எனினும் இப்போது பல அச்சுறுத்தலுக்கு உட்பட்டு வருகின்றேன். என்னைப்போல பலர் துன்பப்படுகின்றனர். மேலும் அவர்கள் இவ்வாறான அச்சுறுத்தலுக்கு உட்படுத்தப்படுவதால் அவர்கள் மீண்டும் அரசின் அடக்குமுறைக்கெதிராக போராடவேண்டி வரும் எனவும் தெரிவித்தார்.

குறிப்பு - இக்கட்டுரை http://america.aljazeera.com/articles/2014/3/12/in-sri-lanka-signsofwarslowlybeingerasedbutnotthescars.html என்ற ஆங்கில கட்டுரையில் தமிழ் வடிவம்

# சிறுவர்முரசு

## பாம்பு அழுத கதை..!



அணிலே அணிலே ஓடி வா!
அழகு அணிலே ஓடி வா!
கொய்யா மரம் ஏறி வா!
குண்டு பழம் கொண்டு வா!
பாதி பழம் உன்னிடம்,
பாதி பழம் என்னிடம்.
கூடி கூடி இருவரும்
கொறித்து கொறித்து தின்னலாம்.

கௌமித்தா கலைக்குமார்
– சிட்னி



ஒரு நல்ல பாம்பு ஒரு முனிவரிடம் அழுது வருத்தப்பட்டு சொன்னது. "எனக்கு நல்ல பாம்பு என்று பெயர் இருந்தாலும் யாரும் என்னை நல்லவனாக நினைப்பதில்லை. என்னைக் கண்டாலே வெறுக்கிறார்கள் அல்லது பயப்படுகிறார்கள். எனக்கு வருத்தமாக இருக்கிறது."

அதற்கு அந்த முனிவர், "நீ எல்லோரையும் கடித்து துன்புறுத்துகிறாய். யாரையும் கடிக்காமல் இரு" என்று புத்தி சொல்லி அனுப்பினார்.

சில நாள் கழித்து அந்த பாம்பு ரத்த காயங்களுடன் அழுது கொண்டு வந்து நின்றது.

"நீங்கள் சொன்னபடி யாரையும் நான் கடிக்கவில்லை. இருந்தாலும் என்னைக் கண்டவுடன் கல்லால் அடிக்கிறார்கள்." என்று அழுதது.

"நான் கடிக்க வேண்டாம் என்று தான் சொன்னேன். சீற வேண்டாம் என்று சொல்லவில்லையே. நீ சீறியிருந்தால் அடிக்காமல் பயந்து ஒதுங்கி இருப்பார்கள்....

நல்லவனாக இரு. அதற்காக கோழையாக இருந்து விடாதே" என்று மீண்டும் புத்தி சொல்லி அனுப்பினார்.

குமரி பையன்.

## ஆத்திசூடியை உலகறியச் செய்வோம்..!

**44. சக்கர நெறி நில்**
Honor your Lands Constitution.
**45. சான்றோர் இனத்து இரு**
Associate with the noble
**46. சித்திரம் பேசேல்**
Stop being paradoxical
**47. சீர்மை மறவேல்**
Remember to be righteous.
**48. சுளிக்கச் சொல்லேல்**
Don't hurt others feelings
**49. சூது விரும்பேல்**
Don't gamble
**50. செய்வன திருந்தச் செய்**
Action with perfection
**51. சேரிடம் அறிந்து சேர்**
Seek out good friends
**52. சையெனத் திரியேல்**
Avoid being insulted
**53. சொற் சோர்வு படேல்**
Don't show fatigue in conversation
**54. சோம்பித் திரியேல்**
Don't be a lazybones
**55. தக்கோன் எனத் திரி**
Be trustworthy
**56. தானமது விரும்பு**
Be kind to the unfortunate

**57. திருமாலுக்கு அடிமை செய்**
Serve the protector
**58. தீவினை அகற்று**
Don't sin
**59. துன்பத்திற்கு இடம் கொடேல்**
Don't attract suffering
**60. தூக்கி வினை செய்**
Deliberate every action
**61. தெய்வம் இகழேல்**
Don't defame the divine
**62. தேசத்தோடு ஒட்டி வாழ்**
Live in unison with your countrymen
**63. தையல் சொல் கேளேல்**
Don't listen to the designing
**64. தொன்மை மறவேல்**
Don't forget your past glory
**65. தோற்பன தொடரேல்**
Don't compete if sure of defeat
**66. நன்மை கடைப்பிடி**
Adhere to the beneficial
**67. நாடு ஒப்பன செய்**
Do nationally agreeables
**68. நிலையில் பிரியேல்**
Don't depart from good standing
**69. நீர் விளையாடேல்**
Don't jump into a watery grave
**70. நுண்மை நுகரேல்**
Don't over snack

**71. நூல் பல கல்**
Read variety of materials
**72. நெற்பயிர் விளைவு செய்**
Grow your own staple
**73. நேர்பட ஒழுகு**
Exhibit good manners always
**74. நைவினை நணுகேல்**
Don't involve in destruction
**75. நொய்ய உரையேல்**
Don't dabble in sleaze
**76. நோய்க்கு இடம் கொடேல்**
Avoid unhealthy lifestyle
**77. பழிப்பன பகரேல்**
Speak no vulgarity
**78. பாம்பொடு பழகேல்**
Keep away from the vicious
**79. பிழைபடச் சொல்லேல்**
Watch out for self incrimination
**80. பீடு பெற நில்**
Follow path of honor
**81. புகழ்ந்தாரைப் போற்றி வாழ்**
Protect your benefactor
**82. பூமி திருத்தி உண்**
Cultivate the land and feed
**83. பெரியாரைத் துணைக் கொள்**
Seek help from the old and wise
**84. பேதைமை அகற்று**
Eradicate ignorance

**85. பையலோடு இணங்கேல்**
Don't comply with idiots
**86. பொருள்தனைப் போற்றி வாழ்**
Protect and enhance your wealth
**87. போர்த் தொழில் புரியேல்**
Don't encourage war
**88. மனம் தடுமாறேல்**
Don't vacillate
**89. மாற்றானுக்கு இடம் கொடேல்**
Don't accommodate your enemy
**90. மிகைபடச் சொல்லேல்**
Don't over dramatize
**91. மீதூண் விரும்பேல்**
Don't be a glutton
**92. முனைமுகத்து நில்லேல்**
Don't join an unjust fight
**93. மூர்க்கரோடு இணங்கேல்**
Don't agree with the stubborn
**94. மெல்லி நல்லாள் தோள்சேர்**
Stick with your exemplary wife
**95. மேன்மக்கள் சொல் கேள்**
Listen to men of quality
**96. மை விழியார் மனை அகல்**
Dissociate from the jealous
**97. மொழிவது அற மொழி**
Speak with clarity
**98. மோகத்தை முனி**
Hate any desire for lust
**99. வல்லமை பேசேல்**
Don't self praise


......தொடரும்

**100. வாது முற்கூறேல்**
Don't gossip or spread rumor
**101. வித்தை விரும்பு**
Long to learn
**102. வீடு பெற நில்**
Work for a peaceful life
**103. உத்தமனாய் இரு**
Lead exemplary life
**104. ஊருடன் கூடி வாழ்**
Live amicably
**105. வெட்டெனப் பேசேல்**
Don't be harsh with words and deeds
**106. வேண்டி வினை செயேல்**
Don't premeditate harm
**107. வைகறைத் துயில் எழு**
Be an early-riser
**108. ஒன்னாரைத் தேறேல்**
Never join your enemy

தொடரும்.......







# மலேசிய விமானம் நடந்தது என்ன?

பேருடன் காணாமல் போன மலேசியன் விமானம் 329 தொடர்பாக பல தரப்பினரிடமிருந்தும் பலவாறான கருத்துக்கள் ஊகங்கள் அடுத்தடுத்து வெளிவந்த வண்ணமுள்ளது. விமானம் கடத்தப்பட்டதா, பைலட்களே தற்கொலை எண்ணத்துடன் விமானத்தை கடலில் மூழ்கடித்தனரா போன்ற பல கேள்விகளுக்கு விடை கிடைக்காமல் மர்மம் நீடிக்கிறது. இருப்பினும் விமானத்தை இயக்கிய சக விமானி **Fariq Abdul Hamid** இன் கட்டுப்பாட்டறை நடத்தை கேள்விக்குறியது .என முதலாவது தகவல் வெளியாகியிருந்தது

அண்மையில் அவுஸ்ரேலிய இளம் பெண் வழங்கியுள்ள தொலைக்காட்சி பேட்டி அனைவரையும் வேறு திசைகளில் சிந்திக்க தூண்டியது. அவர் தனது பேட்டியில், விமானிகள் அமரும் கட்டுப்பாட்டு அறையில் Fariq Abdul Hamid நடத்தை கேள்விக்குறியது என்ற தகவல் வெளியாகியிருந்தது. மலேசியன் ஏர்லைன்ஸ்சிற்குச் சொந்தமான MH370 விமானம் காணாமல் போய் 3வாரங்களைக் கடந்துள்ளபோதும் எந்தவிதமான ஏற்றுக்கொள்ளக்கூடிய முன்னேற்றங்களை காணமுடியவில்லை. விமானத்தைத் தேடும் முயற்சி தீவிரமாக்கப்பட்டு வரும் இந்நிலையில், அவ்விமானத்தை இயக்கிய சக விமானி பற்றிய புதியத் தகவல் வந்து தற்போது அந்த விடயம் .அடங்கிவிட்டது

கோலாலம்பூர் அனைத்துலக விமான நிலையத்திலிருந்து பெய்ஜிங் நோக்கி மார்ச் 8-ஆம் தேதி பின்னிரவு 12.41 வாக்கில் புறப்பட்ட MH370 விமானத்தை இயக்கியவர்கள் தலைமை விமானி கேப்டன் சாஹாரி மற்றும் சக விமானி ஃபாரிக் அப்துல் ஹமீட் (வயது 27) ஆகியோர். இவர்களில் 27 வயதான விமானி ஃ பாரிக்கின் கட்டுப்பாட்டு அறை நடத்தை கேள்விக்குறியது என தகவலை வெளியிட்டுள்ளார் ஒரு ஆஸ்திரேலிய பெண்ணான ஜோன்ட்ரி ரூஸ். இவ் விமானி 2007 ஆண்டிலிருந்து கடமையாற்றி வரும் நிலையில் இவரின் பொறுப்பு தலைமை விமான ஓட்டுனர் (**First Officer in Malaysian Airlines**). இவர் .2613 மணிநேர விமான ஓட்டி அனுபவமுடையவர

ஆஸ்திரேலியாவின் பிரபல தொலைக்காட்சி நிகழ்ச்சியில் இந்த தகவலை வெளியிட்டிருந்தது. ஜோன்ட்ரி ரூஸ் மற்றும் ஜான் மேரி ஆகிய இருவரும் ஒருமுறை புக்கேட் விமான நிலையத்திலிருந்து கோலாலம்பூர் அனைத்துலக விமான நிலையத்தை நோக்கி பயணித்த விமானத்தை இயக்கியவர்களில் விமானி ஃபாரிக்கும் ஒருவர். அப்போது அவர், அவ்விருவரையும் விமானத்தின் கட்டுப்பாட்டு அறையின் அனுபவத்தைப் பெற அழைத்ததாகவும், தாங்களும் அவ்வாய்ப்பைத் தவறவிடவில்லை என்றும் புகைப்படத்துடன் கூடிய ஆதாரத்தை வெளியிட்டுள்ளார். தாம் கட்டுப்பாட்டறையில் சரளமாக உரையாடியதாகவும் ஙஅவர் தன்னை புகழ்ந்து பேசியதாகவும் கூறுகின்றார

விமானி கட்டுப்பாட்டறையில் விமானியினது தொப்பியினை இப்பெண்கள் அணிந்து புகைப்படமும் எடுத்துள்ளனர் அத்தோடு இவர்கள் நால்வரும் புகைப்படத்தில் இருப்பதால் ஐந்தாவது நபரே புகைப்படம் எடுத்திருப்பார் அவ்வாறாயின் விமானப்பயணம் எவ்வாறு நடைபெற்றிருக்கும்? இதுவரை ஏன் இவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கையினை மேற்கொள்ளப்படவில்லை? அத்தோடு கோலாலம்பூரில் தங்கினால் தான் இடங்கள் சுற்றி காட்டுவதாகவும் இவ்விமானி கூறியிருந்திருக்கின்றார் காப்பீட் அறையில் விமானி புகைபிடித்தும் இருக்கின்றார், இவர்கள் இதன் .பின்னர் **Facebook** இலும் நண்பராகி விட்டனர

3வாரத்திற்கு முன்னர் காணாமல் போன மலேசியன் ஏர்லைன்ஸ் விமானத்தை இயக்கியவர்களின் தம்முடன் கட்டுப்பாட்டு அறையில் புகைப்படம் எடுத்துக் கொண்ட விமானி ஃபாரிக்கும் ஒருவர் என அறிந்து அவர் அதிர்ச்சியடைந்ததாகவும் "A Current Affair" எனும் தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கு அளித்தப் பேட்டியில் ஜோன்ட்ரி ரூஸ் இத்தகவலை வெளியிட்டிருந்தார். விமான நெறிமுறைகளின் படி, கட்டுப்பாட்டு அறையில் தலைமை விமானியும், சக விமானியும் மட்டுமே அனுமதிக்கப்படுவர். மற்றவர்களை அனுமதிப்பது சட்டப்படி குற்றமாகும். இந்நிலையில் காணாமல் போன விமானத்தை இயக்கிய விமானி ஃபாரிக் மீதான இந்த தகவல், விமானம் காணாமல் போன சம்பவத்தில் ஒரு புதியத் திருப்பத்தையும், விமானத்தின் பாதுகாப்பு மீதான .மருட்டலையும் ஏற்படுத்தியிருந்தது

குறித்த விமானி அழைத்தவர்கள் சிலவேளை தீவிரவாதிகளாக இருந்தால் நிலமை என்னவாகும்? இந்த சம்பவம் இதுதான் முதல் தடவையா அல்லது இவ்விமானி மட்டும் இந்த செயலை செய்துவருகின்றாரா? மலேசிய விமான பாதுகாப்பு தொடர்பாக எத்தகைய சந்தேகங்களை ஏற்படுத்ததும் என்பதனை கருத்தில்




மிதக்கும் பொருட்கள் நீலம் மற்றும் ஆரஞ்சு நிறம் உள்ளிட்ட பல நிறங்களில் உள்ளன. அவை மாயமான மலேசிய விமானத்தின் நிறங்களை போன்ற தோற்றத்தில் உள்ளது. எனவே, அவை மாயமான மலேசிய விமானத்தின் பாகங்களாக இருக்கலாம் என்ற கூறபட்டது ஆனால் இன்று அதுவும் விமான பாகங்கள் அல்ல என்றும் அவை மீன் சாதங்கள் என்று தற்போது கண்டறியப்பட்டு உள்ளது.

எடுக்கவேண்டும். தொலைக்காட்சி பேட்டியில் கருத்துரைக்கும் மலேசியன் பிரதமர் இது எங்களுக்கு அப்பாற்பட்ட இறைவனின்(அல்லாவின்) செயல் என்றவாறாக கருத்துக்களையே சொல்லி வந்தார். செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் அதிகாரிகள் வதந்திகளை நம்பவேண்டாம் நாம் தரும் செய்திகளே உண்மையானவை என்கின்றனர

வ்விமானம் கடந்த 27.02.2014 இல் தான்இ இதற்குரிய தரப் பரிசோதனை செய்யப்பட்டு சான்றிதழ் பெறப்பட்டிருந்தது. அடுத்த சோதனைக்காலம் அடுத்த 6 மாதத்தின் பின்னராகும் இன்னொரு அதிகாரியின் கூற்றுப்படி விமானத்தின் வலதுபுறச் செட்டை ஒரு மீற்றர் அளவில் உடைவு ஏற்பட்டு இரு ஆண்டுகளுக்கு முன்னர் இது சீர்செய்யப்பட்டிருந்தாலும் அதன் பின்னர் பரிசோதனை சான்றிதழ் பெறப்பட்டிருப்பதாக சொல்லப்படுகின்றது. எது எவ்வாறு நடந்திருப்பினும் விமானத்தின் சிதைவுகள் எதனையும் இதுவரையும் கண்டுபிடிக்க முடியாமல் போனது மலேசியன் விமான பாதுகாப்பு தொடர்பில் பாரிய .எச்சரிக்கை சமிக்கையை தோற்றுவித்துள்ளது

முதலில் அதில் பயணித்தவர்களில் இருவர் மோசடியான கடவுச்சீட்டில் பயணமானதாக சொல்லப்பட்டு தீவிரவாதிகளின் நடவடிக்கையாக இருக்கலாம் என்ற கோணத்தில் விசாரிக்கப்பட்டது. அதில் பயணமான நபர்கள் இருவரும் ஈரானியர்கள் என்றும் ஒருவர் தீவிரவாத அமைப்பை சேர்ந்தவரல்ல என்று அறிவிக்கப்படுகின்றது. மற்றயவரின் பின்னணி ஆராயப்பட்டது. தீவிரவாத .நடவடிக்கை அல்ல என்றவாறு முடிவாகியது

முதல்கட்டமாக விமானத்தின் பைலட் வீட்டில் அதிநவீன கருவிகள் மூலம் சோதனை செய்தனர். இத்தகவலை மலேசிய மந்திரி ஹிஜாமுதீன் உறுதி செய்தார்.ஆனால் இதை தலைமை போலீசார் தான் உறுதி செய்யவேண்டும்.ஆனால் இதில் .கெட்ட எண்ணம் எதுவுமில்லை எனவும் அவர் கூறினார

அமெரிக்க புலனாய்வுத்துறை, மற்றும் சீன உளவுத்துறை, பிரிட்டனின் எம்ஐ6 ஆகியவையும் இணைந்து விசாரணை .நடத்தி வருகின்றன என கூறினார

விமானியின் வீட்டில் இருந்த கம்ப்யூட்டர்களின் ஹார்ட் டிஸ்க்குகளை கைப்பற்றியுள்ளனர். இதில் விமானம் குறித்து பல விடைதெரியாத கேள்விகளுக்கு பதில் இருக்கலாம் என கருதப்படுகிறது. பின்னர் அது தொடர்பில் .எதுவும் அறிவிக்கப்படவில்லை

பின்னர் இது இவ்வாறு இருக்கின்றபோதும் சீனப்பயணி ஒருவரின் தொலைபேசி விமானம் காணாமல் போய் இரண்டாம்நாள்மூன்றுமுறைஒலித்ததாகசொல்லப்பபட்டது. இருப்பினும் எந்த ஒரு அழைப்பையேனும் அவர்கள் எடுக்காத பட்சத்தில் இடத்தினை கண்டுபிடிப்பது கடினம் என அதிகாரிகள் கைவிரிக்கின்றனர். பின்னர் விமானக்கதவு கண்டுபிடிக்கப்பட்டதாக சொல்லப்பட்டது அதன்பின் அது இவ்விமானத்தினுடையது அல்ல என தெரியப்படுத்தப்பட்டது. அதன்பின் கதவின் படியுடனான ஒருபகுதி கண்டுபிடிக்கப்பட்டதாக சொல்லப்பட்டபோதும் .அதனை அதிகாரிகள் உறுதிப்படுத்தவில்லை

றுதியில் ஆஸ்திரேலியா அருகே கடலில் விழுந்துஇ நொறுங்கி இருக்கலாம். அதில் சென்றவர்கள் உயிர் பிழைத்திருக்க ஒரு வாய்ப்பும் இல்லை என்று மலேசிய அரசு அறிவித்தது. இதனால் சீன பயணிகளின் உறவினர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். என்னவோ மர்மம் உள்ளது. உண்மைகளை மலேசிய அரசு மறைக்கிறது. எந்த ஆதாரமும் இல்லாமல், விமானத்தில் சென்றவர்கள் இறந்திருக்கலாம் என்று மலேசிய அரசு எப்படி கூறியது. இதற்காக மலேசிய அரசு மன்னிப்பு கேட்க வேண்டும் என்று சீன பயணிகளின் உறவினர்கள் .கொதித்தெழுந்துள்ளனர

விமானத்துக்கு என்ன ஆனது என்ற உண்மை தெரிய வேண்டும் என்றும், அதற்கான ஆதாரங்கள் காண்பிக்கப்பட வேண்டும் என்றும் என்றும் கூறும் வாசகங்கள் அடங்கிய பதாகைகளோடு அவர்கள் மலேசியத் தூதரகம் முன்பு ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர

தொடர்ச்சி 03ம்...................


FLY WINGS
Travel Agents
Lic No : 31883
Competitive Airfares
Accommodation & Tours
Travel Insurance
Interstate Coach Bookings
For All Your Travel Needs Contact Your Friendly Travel Agent
SHOP 4 DANDENONG ARCADE, 236 LONSDALE STREET, DANDENONG 3175
PH: (03) 9791-7522 FAX: (03) 9794-7844 EMAIL: fly1@net2000.com.au


LOANS! LOANS! LOANS!
வீடு வாங்கும் எண்ணமா?
வியாபாரம் ஆரம்பிக்க,
விரிவாக்க விருப்பமா?
முதலீடு செய்ய எண்ணமா?
சகல விதமான கடனுதவிகளும்
சிறப்பாக செய்து தரப்படும்.
Residential / Investment
Commercial Loan and
Equipment Finance
For obligation free consultation & Assessment
A friendly consultation backed up by more than
20 years of banking experience
Contact
Vivek N.Vivekananthan
0407 561 269